பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 01 திங்கட்கிழமை (14.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :108

# உயர் தொழில்நுட்ப 'ரடார்' வசதி

# இலங்கைக்கு பாக். வழங்குகிறது!

## அதற்கு அமெ. ஆசீர்வாதமும் உண்டாம்

கொழும்பு,மார்ச்14

**விடுதலைப் புலிகள் இயக்கம் விமானப் படை ஒன்றை அமைத்து அதனை விஸ்தரித்து விருத்தி செய்து வருவதாகச் செய்திகள் வெளியான பின்னணியில் விமான நகர்வுகளைத் துல்லியமாகக் கண்டறியும் நவீன 'ரடார்' கருவி வசதிகளை இலங்கைக்கு வழங்குவதற்குப் பாகிஸ்தான் முன் வந்திருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன. இந்நடவடிக்கைக்கு அமெரிக்க அரசின் ஆதரவும் ஆசீர்வாதமும் பின்னணியில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.**

விடுதலைப் புலிகள் இயக்கம் தனது விமானப்படையை விருத்திசெய்து வருவதாக செய்திகள் வெளிவந்திருக்கும் நிலையில் அதனால் எழக்கூடிய சவால்களைச் சந்திக்கத் தக்கவாறு அதனை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக விமானப்படைக்கு அதியுயர் தொழில்நுட்பத்திலான 'ரடார்' கட்டமைப்பொன்றை ஏற்படுத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பாகிஸ்தான் அரசு இலங்கைக்கு வழங்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக இந்த விடயம் குறித்து கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்த பாகிஸ்தான் விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி சிரேஷ்ட எயார் மார்ஷல் கலீம் சதாத்துடன் இலங்கை விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா பேச்சுக்களை நடத்தியிருந்தார் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பாகிஸ்தான் விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிக்கும் இடையிலான சந்திப்பின்போதும் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகளின் வசம் விமானங்கள் இருக்குமாயின், அவை இந்தப் பிராந்தியத்திற்கே அச்சுறுத்தலாக இருக்குமென்று பாகிஸ்தான் போன்று அமெரிக்காவும் கருதுவதால் அமெரிக்க - பாகிஸ்தான் பிராந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் நவீனரக 'ரடார்' கருவிகளைக் கொண்ட கட்டமைப்பை இலங்கையில் அமைக்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

புலிகளின் விமான அச்சுறுத்தல் உள்ள பின்னணியில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 'ரடார்' வசதிகள் பாகிஸ்தான் மூலம் இலங்கைக்குக் கிட்டச் செய்வதில் அமெரிக்க ஆசீர்வாதமும் இருப்பதாகத் தெரிகின்றது. (எ-க)

## முருங்கன் துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர் காயம்

மன்னார்,மார்ச்14

வவுனியா - மன்னார் வீதியில் முருங்கன் கற்கண்டான் குளத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இளைஞர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களான ஜேசுதாஸ் நில்ரோய், ஜோதிகன் மரண்டா (வங்காலை, ஜனார்த்தன்) அனுராதபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் நேற்று வாள்வெட்டு இதனால் பதற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

சுன்னாகத்தில் நேற்றிரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது.

நேற்றிரவு 9 மணியளவில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியூடாகச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூன்று இளைஞர்கள் மீது மின

(16ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அத்துமீறல்களைக் கண்டித்து நல்லூரில் இன்று மக்கள் பேரணி நடக்கும்

அரியாலை,மார்ச்14

நீர்வேலிப் பகுதியில் வயோதிப மாது ஒருவரை சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தமை மற்றும் சாவகச்சேரி, வடமராட்சிப் பிரதேசங்களில் படையினர் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட சம்பவங்களைக் கண்டித்து இன்று நல்லூரில் மக்கள் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகும் இந்தப்பேரணி, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் மகஜர் கையளிப்பதுடன் நிறைவுபெறும்.

வலி.கிழக்கு கிராமிய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் கூட்டுறவாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வணிகர்கள், தனியார் துறைப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர்.

பொதுமக்கள் அனைவரும் இந்தக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று வலி.கிழக்கு கிராமிய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

பேரணியில் கலந்துகொள்ளவரும் மக்க

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்புக்கான இணக்கம் சமாதான முயற்சிகளுக்கு உந்துசக்தி!

### நம்பிக்கை வெளியிடுகின்றார் நோர்வே வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு,மார்ச்14

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் இணக்கநிலை தற்போது ஸ்தம்பிதமடைந்ததிருக்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உந்துசக்தியாக அமையக்கூடுமென்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஒஸ்லோவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பிக்கு சத்தியாக்கிரகம்!

திருகோணமலை,மார்ச்14

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் உதவிப் பணிகளில் அரசு செயற்படும் விதத்தைக் கண்டித்து திருகோணமலை மகாடிலுவேவ விகாரையின் விகாராதிபதி தனது சீடர்களுடன் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

திருகோணமலை நகரின் மத்தியில் உள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தின் முன்பாக விகாராதிபதி கமுலுகமுவ நந்தரட்னே தேரரும் அவரது ஐந்து இளம் சீடர்களும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். நேற்று இரண்டாவது நாளாகவும் இந்தப் போராட்டம் தொடர்ந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)



சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட பிக்குவும் அவரது சீடர்களும்...

## சு.கவில் பிரதமரின் ஆள்களை 'வெட்டிவிட' ஜனாதிபதி தயார்!

### கட்சி மறுசீரமைப்பு என்ற பெயரில் 'களையெடுப்பு'

கொழும்பு,மார்ச்14

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைத்தல் என்ற பெயரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான - ஆதரவான - அமைப்பாளர்கள் பலரை அப்பொறுப்புக்களிலிருந்து நீக்கி, கட்சிக்குள் பெரும் களையெடுப்பைச் செய்ய கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தயாராகி வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

கட்சியை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள அதே சமயம், இந்த நடவடிக்கையின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமான அமைப்பாளர்கள் பலர் நீக்கப்படக்கூடுமென்று கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சி மறுசீரமைப்பின் போது ஜனாதிபதி சந்திரிகாவிற்கு நெருக்கமானவர்கள் பலருக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

இன்று
மங்களகரமான திறப்புவிழா
அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்
மு.ப 12.00
மணிக்கு
14.03.2005



துவிச்சக்கர வண்டிகள்
அதன் உதிரிப்பாகங்கள்
கட்டிடப் பொருட்கள்
ஊருக்குள்ளே உன்னதமான சவாரிக்கு வாங்க!
யாழ்நகரில் எமது வர்த்தக
துறையிலான தலைமைத்துவம்
50
வருடங்களுக்கு மேலாக பழைமை வாய்ந்தது.
நேரடி இறக்குமதியாளர் - சந்தைப்படுத்துவோர்
E.S.P. Trading Co. (Pvt) Limited.
இல. 5, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நாள்தோறும் நாடுங்கள்! நாமே முன்னோடிகள்
Piccaso

# மருத்துவ மாணவர் பிரச்சினை தீவிரமடைகிறது இன்று பெரும் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம்,மார்ச்14

இடைநிறுத்தப்பட்டிருக்கும் சத்திர சிகிச்சை கற்றல் செயற்பாடுகளை மீளஆரம்பிக்குமாறு கோரி கடந்த 7ஆம் திகதி முதல் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டுவந்த யாழ். மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவர்கள் இன்று ஏனைய வருட மாணவர்களையும் சேர்த்துப் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

மருத்துவபீடத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப்பேரணி பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தை நோக்கிச் செல்லும்.

காலை 9மணியளவில் மருத்துவபீடம் முன்பாக ஒன்றுகூடும் மருத்துவபீட மாணவர்கள் அங்கிருந்து பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி ஊடாக வளாகத்துக்கு நகர்வர்.

ஜனாதிபதிக்கும் அரச அதிபருக்கும் மகஜர்களைக் கையளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

இன்றைய ஆர்ப்பாட்டப்பேரணி தொடர்பாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் 07.03.2005 முதல் ஆரம்பமாகின. முதலில் துணைவேந்தரின் அலுவலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தமது கற்கைநெறியை ஆரம்பிக்கக் கோரும் முகமாக MBBS - Bachelor of Medicine, Begging for Surgery, 'சத்திர சிகிச்சை கற்றல் வீதியிலா', 'Consider! Consider! the plight of the students' How long is our course? Five years? Six years? or Ten years? Enough false promises, நிர்வாகமே! நடவடிக்கை எடு' போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

அத்துடன், ஜனாதிபதி உள்ளடங்கலான சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நிறுவனங்களிற்கும் எமது இறுதிவருட சத்திர சிகிச்சை கற்கைநெறியை மிக விரைவில் ஆரம்பிக்கக் கோரி கடிதங்களையும் அனுப்பியுள்ளோம்.

இதன் விளைவாக துணைவேந்தர் அவர்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவருடன் தொடர்புகொண்டு அவரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஒரு நேரம் ஒதுக்கித்தரும்படி கேட்டுக்கொண்டார். மானிய ஆணைக் குழுத் தலைவர் அவர்கள் இன்று 14.03.2005 துணைவேந்தர் அவர்களையும் மருத்துவபீட பீடாதிபதி அவர்களையும் சந்திப்பதாக உறுதியளித்தார். எனினும் மானிய ஆணைக்குழுத்தலைவர் அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் உட்பட ஏற்கனவே சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் தொடர்புகொண்டுள்ளார்.

11.03.2005 வெள்ளிக்கிழமையன்று எமது மாணவர்களால் துணைவேந்தர் அவர்கள் தமது அலுவலகத்தினுள் உட்பிரவேசிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டார். எமது பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பித்து இரண்டு நாள்களின் பின்பு துணைவேந்தர் அவர்கள் உயர் கல்வி அமைச்சைத் தொடர்புகொண்டு எமது பிரச்சினைக்குரிய தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, துணைவேந்தர் அவர்கள் மீண்டும் மீண்டும் பொய்யான வாக்குறுதிகளை தருவதன் மூலம் மாணவர்களைத் திருப்திப்படுத்தவும் தனது தார்மீக பொறுப்புகளிலிருந்து நழுவவும் முயன்றுள்ளார்.

எனினும் அதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் அவரால் எடுக்கப்படவில்லை. எனவே, துணைவேந்தர் அவர்களை அவரது அலுவலகத்தினுள் உட்பிரவேசிக்கவிடாது தடுப்பதன் மூலம் மானிய ஆணைக்குழுவின் தலைவரைச் சந்திப்பதற்கு ஓர் அழுத்தத்தைப் பிரயோகிக்கமுடியும் என எமது மாணவர்கள் நம்பினர். எனினும், மற்றைய பீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் எமது போராட்டம் மூலம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் மிக உறுதியாகிவிருக்கிறோம்.

எமது கல்விப் பிரச்சினைக்குரிய இறுதித் தீர்வான 'எமது இறுதி வருட கற்றை நெறியை மீள ஆரம்பித்தல்' எனும் முடிவு எட்டப்படாத விடத்து எமது மருத்துவபீடத்தின் அனைத்து அணி மாணவர்களும் போராட்டத்தில் இணைந்து வலுச்சேர்க்கவுள்ளனர் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

இன்று 14.03.2005 மருத்துவபீட மாணவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற இருக்கிறது. எமது மாணவர்கள் தமது பிரச்சினைக்குரிய தீர்வை வலியுறுத்தி நிர்வாகத்தின் அசமந்தப்போக்கைக் கண்டித்தும் இறுதிவருட சத்திர சிகிச்சை கற்கைநெறியை ஆரம்பிக்கக் கோரியும் யாழ்.மருத்துவபீடத்தில் தமது ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்து யாழ். பல்கலைக்கழக வளாகத்தை நோக்கி நகரவுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## பேராலய வளாகத்தில் வைத்து வயோதிபரிடம் சங்கிலி அபகரிப்பு

### மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை

யாழ்ப்பாணம்,மார்ச்14

ஆலய வழிபாட்டிற்குச் சென்ற வயோதிபர் ஒருவருடைய தங்கச்சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மரியன்னை பேராலய வளாகத்தினுள் நேற்று மாலை 4.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டேவிட் (வயது 70) என்ற வயோதிபரே தனது சங்கிலியை இழந்துள்ளார்.

நேற்று மாலை வழமைபோல் வழிபாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த தன்னை தேவாலய வளாகத்தினுள் அத்துமீறி மோட்டார் சைக்கிளில் நுழைந்த இளைஞர் இருவர் தள்ளி கீழே விழுத்திவிட்டு சங்கிலியை அபகரித்துச் சென்றுவிட்டனர் என்றும் - இதனால் கீழே விழுந்த தனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும் குறிப்பிட்ட வயோதிபர் தெரிவித்தார்.

(எ-13)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்14

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை சப்பரத் திருவிழாவும் 24ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

(எ-203)

★ ★ ★

தொல்புரம்,மார்ச்14

யாழ். போதனா வைத்தியசாலையினுள் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்தின் பரணி உற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளுடன் இந்த உற்சவம் இடம்பெற்று வைரவப் பெருமான் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (எ-203-ரி)

★ ★ ★

சுழிபுரம்,மார்ச்14

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்மாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் எதர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்

தொடர்ந்து 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கும்பாபிஷேகமும் மறுநாள் நவோத்திர சகஸ்ர மகா சங்காபிஷேகமும் இடம்பெறும்.

(எ-28-203)

## ஜனாதிபதி, பிரதமருடன் மோல்டா அமைச்சர் பேச்சு

இலங்கை வந்துள்ள மோல்டா தீவுகளின் வெளிவிவகார அமைச்சர் மைக்கேல் பிரெண்டோ இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்திக்கவுள்ளார்.

முன்னதாக இன்று காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் மோல்டா வெளிவிவகார அமைச்சர் சந்திப்பார்.

இதேவேளை, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்டெட்டும் இன்று அலரி மாளிகையில் பிரதமரைச் சந்திக்கவுள்ளார்.

இலங்கையில் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளின்போது இந்தியப் படையினர் ஆற்றிய பணிகளுக்காக சேவை நலன் பாராட்டு நிகழ்வு இன்று அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

## 8 அடி உயரத்துக்கு எழுந்த கடல் அலைகள் குடிமனைக்குள் புகுந்தன! மக்கள் சிதறி ஓட்டம்!!

### நெல்லை மாவட்டத்தில் மீண்டும் சுனாமி?

தமிழ்நாடு,மார்ச்14

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மாதங்களிற்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்நாடு நெல்லைக்குமரி மாவட்ட கடற்பகுதியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் மக்களிடையே தொடர்ந்து அச்சம் நிலவிவந்தது. எனினும் பொதுமக்கள் சுனாமி குறித்து அச்சமடையத் தேவையில்லை என்று வானிலை ஆராய்ச்சி மைய நிபுணர்கள் அறிவுறுத்தியிருந்தனர். ஆனால் தற்போது கடல் நீர் கொந்தளித்து கரையோரங்களுக்குள் நீர் புகுந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் நெல்லைக்குமரி மாவட்டத்தில் 8 அடி உயரத்திற்கு எழுந்த பேரலைகள் கரையைத் தாக்கி கடல் நீர் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு புகுந்தது.

இதனால் 4 வீடுகள் சேதமடைந்தன. கடற்கரையோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கட்டுமரங்கள் தூக்கி எறியப்பட்டன. வலைகள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டன. அனுமன் நதி கலக்கும் முகத்துவாரத்தில் 600 மீற்றர் தூரத்திற்கு கடல் நீர் புகுந்தது.

இதனால் மக்கள் பீதியடைந்து மேடான பகுதிகளுக்கு ஓடினர்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் அதிகாலை கடலில் மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் இப்பிரதேச மக்கள் பயப்பீதியுடன் இருக்கின்றனர்.

இந்தத் திடீர்க் கொந்தளிப்பினால் உவரி, கடந்தங்குளி, மணப்பாறை, திருச்செந்தூர், தூத்துக்குடி, புன்னக்காயல், காயல்பட்டினம் உள்ளிட்ட கடலோரப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம் அருகே தென்னந்தோப்புகளில் கடல் நீர் உட்புகுந்தது.

தென்னந்தோப்புக்குள் புகுந்த கடல் நீர் தென்னந்தும்புகள், தேங்காய் நார்கள் உட்பட 45 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அள்ளிச்சென்றது.

குமரியில் நேற்றுமுன்தினம் கடற்கொந்தளிப்புக் காணப்பட்டது. சின்னமுட்டம், ஆரோக்கியபுரம், கோவளம் கடற்கரைப் பகுதிகளில் வழக்கத்தைவிட பெரிய அலைகள் கரையைத் தாக்கின. கோவளத்தில் குடியிருப்பு வரை கடல் நீர் சென்றதால் மக்கள் தொடர்ந்து அச்சத்தில் உள்ளனர்.

(த-204)

## ஈரானில் வெள்ளம்; மூவர் பலி!

தெஹ்ரான்,மார்ச்14

ஈரானில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் மூன்று பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஈரானில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் அங்கு பெரும் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் பரவலாக மழை பெய்து வருகின்றபோதிலும் மேற்கு மற்றும் வடகிழக்கு மாகாணங்களில் கூடுதல் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தெஹ்ரான் தகவல்கள் தெரிவித்தன.

மேல் மாகாணத்தில் சுமார் நூறு கிராமங்கள் வெள்ளதில் மூழ்கியுள்ளன. வீடுகளை விட்டு வெளியேறியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பாடசாலைகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

## அணு ரகசியத்தை பாக். விஞ்ஞானி ஈரானுக்குக் கொடுத்தது உண்மை!

### ஒப்புக்கொள்கிறார் பாகிஸ்தான் அமைச்சர்

பாகிஸ்தான்,மார்ச்14

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கான் அணு ஆயுதம் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப ரகசியங்களை ஈரானுக்குக் கொடுத்தார் என்று பாகிஸ்தான் அமைச்சர் ஷேக் ரஷித் அஹமது ஒப்புக்கொண்டுள்ளார்.

இது பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரானுக்கு அணு ஆயுத ரகசியம் கொடுத்ததை வெளிப்படையாக பாகிஸ்தான் அரசு ஒப்புக்கொண்டது இதுவே முதன்முறையாகும்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தான் எதிர்க்கட்சி எம்.பிக்களும் மத அடிப்படைவாதிகளும் அமைச்சருக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டுள்ளார் என்று எதிர்க்கட்சி எம்.பிக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மத அடிப்படைவாதிகளின் தலைவரான குவாசி ஹுசைன் அஹமது கூறுகையில் -

அமைச்சரின் இந்த நடவடிக்கை நாட்டின் பாதுகாப்புக்கே ஆபத்தாக முடியும் என்றார்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அமைச்சர் ஷேக் பதிலளித்துப் பேசுகையில் நான் தனிப்பட்ட முறையில்தான் அவ்வாறு தெரிவித்தேன். அரசுக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை -

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கூறி அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. (த-204)




## அரச பஸ் கால்வாயில் கவிழ்ந்ததில் குஜராத்தில் 27 பேர் உயிரிழப்பு!

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அஹமதாபாத் அருகே அரச பஸ் கால்வாய் ஒன்றிற்குள் கவிழ்ந்ததில் 27 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

உலக அரங்கில்

குஜராத் மாநிலத்தில் இருந்து சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள டக்கார் நகரில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மாநில அரசுக்குச் சொந்தமான - விபத்துக்குள்ளான - பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததினால் 'மகி' எனப்படும் கால்வாய்க்குள் கவிழ்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

காயமடைந்தவர்கள் மாநில வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இந்த விபத்துக் குறித்த விசாரணையைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மரணத்தின் பின்னரும் வாழும் இயேசுவின் தியாகக் கதை கூறும் தவக்கால ஆற்றுகை

பிறர்க்கென வாழ்வது மனிதம் - அவர்
துயர் தனைத் துடைப்பது மனிதம்
அறந்தனில் உறைந்தது மனிதம் - இதன்
திறந்தனைப் புரிவதேன் கடினம்.

பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்.

அசைக்கமுடியாத நம்பிக்கையும் துணிகரமான இறை விடுதலைப் பணியும் இயேசுவை சிலுவையில் தொங்கவைத்தது. உண்மையைப் பற்றிய இறை சாட்சியை ஏளனத்தாலும், கசையடியாலும் அமர்த்த முயன்றான் பிலாத்து.

துயருறும் அனைவரையும் ஒன்றிணைக்கும் மானிட மகன் என்ற இயேசுவின் நம்பிக்கையை எள்ளி நகையாடினர் சமயத் தலைவர்கள்.

இயேசுவின் முகத்தில் கொடிய யூதர்கள் துப்பினார்கள். சிரசில் முள்முடியை வைத்து நீ அரசனா என்று வினா எழுப்பி நகையாடினார்கள். ஆனாலும், இயேசு அவர்களுக்குப் பணியவும் இல்லை. அவர்களைச் சபிக்கவும் இல்லை. மாறாக அவர்களின் குற்றங்களுக்காகவும் மன்னிப்பைக் கொடுத்தார்.

இன்றும் அநேகர் அடிமைப்பட்டோரை விடுவிக்க முயன்று அடக்கு முறையாளர்களால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பலர் கொடூரமான வன்கொடுமைகளால் இரக்கமின்றிச் சிதைக்கப்படுகின்றார்கள். அணுவணுவாகக் கொல்லப்படுகிறார்கள். அவர்களின் உடல்கள் சின்னாபின்னமானாலும் அவர்களின் உள்ளங்கள் இன்னும் அதிகமாகவே வலிமையடைகின்றன என்பது உண்மை.

இயேசுவை அரசியல் தலைவர்களாலும், மதவாதிகளினாலும் கல்லறைக்குள் கட்டிப்



போட முடியவில்லை. ஏனெனில், இயேசு சமூக - சமய விடுதலைக்காகப் போராடிய வீரன்.

இதனால், அவர் மரணத்திற்கு அப்பாலும் வாழ்கின்ற தெய்வமாக, உயிர்ப்புப்பெற்றெழுந்தவராக இருக்கின்றார்.

பிறருக்காகப் போராடுகின்றவர்கள் எப்போதும் தங்களைத் தாங்களே விடுவித்துக்கொள்ளுகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

அவர்களுக்குச் சாவு ஒரு முடிவு அல்ல. மாறாகச் சாவு ஓர் ஆரம்பம் அவர்கள் வாழ்வுக்கு.

அவர்கள் இவ்வுலகம் இருக்கும மட்டும் வாழ்வார்கள் என்பது அசைக்கமுடியாத உண்மை ஆகும்.


கயவர்களின் அதிகாரம், சமூக விடுதலைக்காகப் போராடுபவர்களை எதுவும் செய்துவிடாது. அவர்களால் பொய்க்குற்றம் சுமத்தமுடியும் - அணுவணுவாக சித்திரவதை செய்ய முடியும் - உடலைச் சிதைத்து உயிரைப் பறித்துக்கொள்ள முடியும். ஆனால், அவர்கள் இறந்த பின்னும் வாழ்வதைத்தடுக்க முடியாது. இதனால்தான் இன்றும் இயேசு தலைமகனாக வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்.

இயேசு இறைமகன், அவர் சமூக விடுதலைக்காக - ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காக - குரலற்ற அப்பாவிகளின் குரலாக - அநீதி கண்டு மௌனித்து இராது தட்டிக் கேட்ட நீதிமானாக - இவ்வுலகில் வாழ்ந்தார். எம்மையும் வாழ அழைக்கின்றார்.

இக்கருவூலத்தை மையமாகக் கொண்டே கிறிஸ்தவர்களின் பக்திநெறிக்காலமாகிய தவக் காலத்தில், மக்களின் ஆன்மீகப் பற்றுறுதியை வலுவடையச் செய்யும் நோக்கில் 'பாஸ்' நடத்தப்படுகின்றது.

ஈழத்தில் சடங்கு நிலை ஆற்றுகையாகவும், விழாநிலை ஆற்றுகையாகவும் திருப்பாடுகளின் காட்சி (பாஸ்) காணப்படுகின்றது. இது ஆரம்பத்தில் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்டாலும், பின்னர் மனிதர்கள் மூலம் நடிக்கின்ற மரபு, ஐம்பதுகளில் தோன்றியது. அதன் பின்னர் தமிழ்மரபாக மலர்ந்து இன்றுவரை பாஸ் நடிக்கப்பட்டு வருகின்றது.

"யாழ்ப்பாணத்தில் 1952இல்தான் முதன் முதலாக மனிதர்கள் நடிக்கின்ற பாஸ், ஆங்கிலத்தில் நிகழ்த்தப் பட்டது. அதனை அறிமுகஞ்செய்தவர் அப்போதைய பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை லோங் அடிகளார். பின்னர் அதனை மொழிபெயர்த்து தமிழிலும் மேடையேற்றினார்கள். ஆனால், பாஸை தமிழருக்குரியதான இலக்கிய நேர்த்தியுடனும் மொழிநடையுடனும் முதலில் தமிழில் எழுதியவர் அருட்திரு. மரிய சேவியர் அடிகளார்தான் என்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை (காவிய நாயகன் நூலின் முன்னுரையில் இருந்து) தெரிவித்துள்ளார்.



1963இல் இருந்து பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகளார் தமிழில் தவக்கால ஆற்றுகையை எழுதி நூற்றுக்கணக்கான நடிகரை ஒன்றிணைத்து, நெறியாள்கை செய்து, இப் பணியை மேற்கொண்டு வருகின்றார்.

ஒருசில பிரதேசம் சார்ந்த ஆலயங்களில் மேடையேற்றப்பட்டுவந்த தவக்கால ஆற்றுகை மரபு, பின்பு 1980களில் யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றத்தின் அரங்கில் தனித்துவத்துடன் மேடையேற்றப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

திருமறைக் கலாமன்றத்தினால் வருடந்தோறும் மேடையேற்றப்பட்டுவருகின்ற இத் தவக் கால ஆற்றுகை வெறும் பொழுதுபோக்கு களியாட்ட நிகழ்வு அல்ல. மாறாக பக்தி முயற்சியை அடிப்படையாக்க் கொண்டது.

கிறிஸ்தவர்கள் இயேசுவின் பாடுகள் - மரணம் - உயிர்ப்பு என்பவற்றை அனுசரிக்கின்ற தவக்காலம் மிகவும் முக்கியமான காலம். இதனால், துன்பியல்பு அனுபவங்களுடன் மிகவும் தத்துருபமாக தவக்கால ஆற்றுகை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

ஒளி - ஒலி அமைப்பின் நேர்த்தியும், பாடல்கள்- இசைகள் என்பனவும் ஆற்றுகையை மேலும் மெருகூட்டிக்கொள்ளுகின்றன.

## 'குருதிகழுவிய குவலயம்'— — படைப்புக்குறித்து ஒருபார்வை

பழைய ஏற்பாட்டில் உள்ள சில விடயங்களும், இயேசு நடத்திய அற்புத நிகழ்வுகளும் ஆற்றுகையை நகர்த்திச் செல்வதற்கான கிளைக கதைகளாகப் பாவிக்கப்படுகின்றன. ஆற்றுகையின் உச்சக்கட்டமாக இயேசுவின் பாடுகள் - மரணம் - உயிர்ப்பே காணப்படுகிறது.

இவை மிகவும் துன்பியல்பு அனுபவமாகவே இருக்கும். இக்காட்சிகள் நடைபெறுகின்ற போது அன்று நடைபெற்றது போல் ஒரு பிரம்மை நிலையை தம்முள் உருவாக்கி பார்வையாளர்கள் மனம்நெகிழ்ந்து அழுதுகொள்வது ஆற்றுகையின் வெற்றி ஆகும்.

நூற்றுக்கணக்கான நடிகர்கள் பக்தி முயற்சியுடனும், உள ஒடுக்கத்துடன் மேற்கொள்ளும் இவ்வாற்றுகை பல நாள் ஒத்திகை பார்த்து, பல ஒழுங்கமைப்புடன், மேடையேறுகின்றது. வருடந்தோறும் பல பெயர்களில் மேடையேற்றப்பட்ட தவக்கால ஆற்றுகை, இவ்வருடம் 'குருதி கழுவிய குவலயம்' என்னும் பெயரில் மேடையேறுகின்றது.

இதற்கான எழுத்துரு, நெறியாள்கை என்பவற்றை திருமறைக்கலாமன்ற உதவிப்பணிப்பாளர் திரு.யோன்சன் ராஜ்குமார் அவர்கள் செய்துள்ளார்.

'குருதி கழுவிய குவலயம்' என்னும் இவ்வாற்றுகையில் 250 இற்கும் அதிகமான நடிகர்கள் பங்கேற்றுக்கொள்ளுகின்றார்கள். இன்றும் நாளையும் எதிர்வரும் 17,18,19,20ஆம் திகதி களிலும் இரவு 7 மணிக்கு மன்ற அரங்கில் மேடையேறவுள்ளது.

இவ்வாற்றுகை பக்தியுணர்வுடன் பார்க்க வேண்டிய ஒன்றாகும். அரசியலினதும் - சமயத்தினதும் அநீதியினால் கொல்லப்பட்ட இயேசுவை, கல்லறை கட்டி வைக்கமுடியாத நிலையை உணர்ந்து, நாமும் சமூக நீதிக்காகக் குரல் கொடுக்க அழைக்கப்படுகின்றோம். ஆகவே, 'குருதி கழுவிய குவலயம்' என்னும் ஆற்றுகையைப் பார்த்து பக்தியை வளர்த்துக் கொள்வதோடு, மன்றத்தின் முயற்சிக்குக் கைகொடுத்து உதவுவோம். ★

**யாழ். ராதவல்லி**

---

## சத்திரசிகிச்சைக் கற்பித்தல் இடைநிறுத்தப்பட்ட விவகாரம்:

# தமது தரப்பு நிலைப்பாட்டை விளக்கி மருத்துவபீட மாணவர்கள் அறிக்கை

**யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இறுதியாண்டு மாணவர்களின் சத்திர சிகிச்சை கற்பித்தல் இடைநிறுத்தப்பட்டிருப்பதை ஆட்சேபித்துப் போராட்டத்தில் குதித்திருக்கும் இறுதி வருட மாணவர்கள் தமது கோரிக்கையை விளக்கி நேற்று விடுத்த அறிக்கை இது.**

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமானது கடந்த 26 வருடகாலமாக நாட்டிற்குப் பெருமை சேர்த்த, சேர்த்துக்கொண்டிருக்கும் பல திறமை மிக்க வைத்தியர்களை உருவாக்கி வெற்றிகரமாக இயக்கி வருகிறது. இக்காலப்பகுதியில் இனப்பிரச்சினையும் யுத்தமும் மோசமாக நடைபெற்ற போதிலும் எமது பீடம் தனது கற்பித்தல நடவடிக்கைகளில் உயர்தரத்தைப் பேணியே வந்துள்ளது. இனப்பிரச்சினையின் மோசமான விளைவுகளிலிருந்து எமது பீடமும் தப்பவில்லை. திறமைமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர்களின் புலம் பெயர்வு மாணவர்களின் கற்றற்காலத்தை பத்து வருடங்கள் என நீட்டியதுடன், சகோதர பீடங்களின் சமகால மாணவர்களிடமிருந்து பின்தங்க வைத்தது.

சென்ற சில வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட தற்காலிக நெருக்கடியற்ற இயல்பு வாழ்க்கை நிலை மூலம் எமது பீட மாணவர்கள் ஏனைய மருத்துவபீடத்தின் சமகால மாணவர்களோடு வெளியேறக் கூடிய வாய்ப்பைப் பெற்றனர். எனினும், கடந்த சில மாதகாலமாக இறுதியாண்டு சத்திர சிகிச்சை கற்பித்தல் முற்றாக இடநிறுத்தப்பட்டுள்ளதால் இறுதிவருட மாணவர்களின் கற்கை நெறி மீண்டும் கேள்விக் குறியாகியுள்ளது.

1992 ஆம் ஆண்டிலிருந்து 13 வருடகாலமாக யாழ். மருத்துவபீடத்தின் சத்திர சிகிச்சைத் துறைக்கு நிரந்தர விரிவுரையாளர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்நிலையில், 1997 ஆம் ஆண்டு நரம்பியல் நிபுணரான வைத்திய கலாநிதி வி.குணானந்தம் அவர்களும் பொது சத்திர சிகிசை நிபுணரான வைத்திய கலாநிதி D.C. அம்பலவாணர் அவர்களும், சிரேஷ்ட விரிவுரையாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்.

வைத்திய கலாநிதி வி.குணானந்தம் அவர்களின் ஒப்பந்தக் காலம் 18.08.2003 அன்று முடிவடைந்ததையடுத்து அவருடைய ஒப்பந்தத்தினை மீளப் புதிப்பிப்பதற்கு யாழ். பல்கலைக்கழகம் மறுப்புத் தெரிவித்தது. எனினும், வைத்திய கலாநிதி D.C.அம்பலவாணர் அவர்கள் சிரேஷ்ட விரிவுரையாளராக தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

2004 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில வருகை தரு பேராசிரியராக ஒருவரும் இரு பொது சத்திரசிகிச்சை நிபுணர்களும், என்பு முறிவு நெரிவு சத்திரசிக்சை நிபுணர் ஒருவரும், வருகை விரிவுரையாளர்களாக மருத்துவபீட சத்திர சிகிச்சைத்துறையுடன் இணைந்துகொண்டனர். வைத்திய கலாநிதி D.C.அம்பலவாணர் அவர்களும் 2004 செப்ரெம்பர் மாதம் வெளிநாட்டு பயணம் மேற்கொள்வதற்காக தனது விரிவுரையாளர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் தனது ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காததை எதிர்த்து வைத்திய கலாநிதி வி.குணானந்தம் அவர்கள் அந் நிர்வாகத்திற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். (வழக்கு . இல.C.A. Application 1559/2003) இவ் வழக்கில் 01.11.2004 அன்று தீர்ப்பு வழங்கிய நீதிமன்று வைத்திய கலாநிதி வி.குணானந்தம் அவர்கள் தரம் 1 சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்படவேண்டும் என்று ஆணையிட்டது. இததீர்ப்பினையடுத்து இதுவரை காலமும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சத்திரசிகிச்சை நிபுணர்கள் இறுதி வருட மாணவர்களிற்கான கற்பித்தல்களிலிருந்து விலகிக்கொண்டனர். இதேவேளை வைத்திய கலாநிதி வி.குணானந்தம் அவர்கள் யாழ்பல்கலைக்கழகப் பேரவையினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாததால், இதுவரை சத்திர சிக்சைத் துறைத் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை.

இறுதிவருட மாணவர்களின் சத்திர சிகிச்சை கற்கை நடவடிக்கைகளிற்கான பொறுப்பை இதுவரை எவரும் பொறுப்பெடுத்து செயற்படுத்த முன்வராத நிலையில் அக்கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டது.

மூன்று மாதங்களிற்கு முன்பு சத்திர சிகிச்சை கற்கைநெறி நிறுத்தப்பட்டபோது, இறுதியாண்டு மாணவர்களாகிய நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். இம்முயற்சிகளிற்குப் பதிலீடாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் எமது இறுதிவருட கற்கை நெறிகள் இடையூறின்றித் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எழுத்து மூலம் உறுதியளித்தார்.

மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இந்தப் பிரச்சினைக்குரிய ஆக்கபூர்வமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எமது மருத்துவபீட நிர்வாகம், பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மாணியக்குழு ஆகியவற்றினால் இப்பிரச்சினை கையாளப்பட்டுத் தீர்க்கப்படாது நீண்டு செல்வதற்கும் எமது சத்திர சிகிச்சை கற்கைநெறி மீண்டும் ஆரம்பிக்கப்பட முடியாது இருப்பதற்கும், காரணமாகவுள்ள அசமந்தப் போக்கையும் கையாலாகாத்தனத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது சகோதர பீடங்களின் சமகால மாணவர்களுடன் ஒரே காலத்தில் வைத்தியர்களாக வெளியேற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வெளிமாவட்ட வைத்தியசாலைகளிற்கு சென்று மருத்துவகற்கை கற்கைநெறிகளை மேற்கொண்டு வந்த எம்மால் ஏனைய மருத்துவ பீடங்களிலிருந்து சமகால மாணவர்கள், வைத்தியர்களாக வெளியேறிவிட்ட நிலையில் இன்னமும் எமது கல்விக்காலத்தில் ஏற்படும் காலதாமதத்தினை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இப்பிரச்சினைகள் இறுதிவருட மாணவர்களாகிய எம்மை மட்டுமல்லாது ஏனைய கனிஷ்ட மாணவர்களையும் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கும் என்பது தெளிவான உண்மையாகும்.

இறுதி வருட மாணவர்களாகிய நாம் கடந்த மூன்று மாதகாலமாக இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டோம், எனினும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் தீர்விற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முடிவுகளும் இதுவரை எட்டப்படவில்லை.

தீர்வுகாண்பதற்கு நாம் எடுத்துவந்த சுமுகமான நடவடிக்கைகள் தோல்வியுற்ற நிலையிலும், எமது கற்கைநெறி தொடர்ந்து மேற்கொள்ளப்பட முடியாத நிலையிலும் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில், எமது கல்வியை மீள ஆரம்பித்து இடையூறின்றி செயற்படவைக்கவேண்டும் என்ற நோக்கில் இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

எனவே, யாழ்.மருத்துவபீடமும், பல்கலைக் கழக நிர்வாகமும், பல்கலைக்கழக மானியக் குழுவும் விரைந்து செயற்பட்டு இப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வினைக்கண்டு எமது கல்வி தொடர வழியமைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். ★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவித்த கணனிகள் விற்பனைக்குண்டு. (Pentium II, Pentium III) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 191, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.: 021 - 2225058. (43037)

## நாடகநூல் விற்பனைக்கு

நவீன சமூக நாடகங்களே பாடசாலை தமிழ்த்தின நாடகப் போட்டி விதிகளுக்குப் பொருத்தமானவை. 400 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 51 நாடகங்களையும் வாசியுங்கள். நீங்களும் நாடகங்கள் எழுதலாம். (43025)

## ஆங்கிலக் கல்வி

மிகவும் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் ஆங்கிலம் கற்றுத் தரப்படும்.வீடுகளிற்கு வந்தும் கற்பிக்க முடியும். தொடர்பு: P.Kodeeswaranathan, 426/2, Killner Lane, Jaffna. (43017)

## தவறிவிட்டது

லோட்டன் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த மூத்ததம்பி தேவதாசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.538303143V) கடந்த 28-02-2005 (திங்கட்கிழமை) மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்படி முகவரியில் ஒப்படைக்கும் வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். (43035)

நாவாந்துறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சகாயமோகன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.651333903V) முகமாலைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'ரட்ணம்ஸ் பெயின்ரர்ஸ்', மாம்பழம் சந்தி, அரியாலை என்னுமிடத்தில் ஒப்படைத்துதவவும். T.P.: 0776176801. (43068)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் -1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் (16-03-2005) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைகோட்டைச் சந்தி. P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. தாரகை, முதலாம் கடடை, பருத்தித்துறை. றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், யாழ். T.P.: 222 - 3529, 222 - 2867. (43071)

## மணமகன் தேவை

யாழ்.ரோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1980 இல் பிறந்த, தொழில் புரியும், அழகிய மணமகளுக்கு டாக்டர், என்ஜினியர் அல்லது பொருத்தமான, தகுந்த உயர் உத்தியோகம் பார்க்கும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2525, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (43052)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1965ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம், ஆஸ்திரேலியா சிற்றிசன். விரைவில் இலங்கைக்கு வரவுள்ள மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. போட்டோ, ஜாதகத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். T.P.: 6779 அல்லது 338162. (42956)

## திருமண சேவை

இந்து கிறிஸ்தவ, உள்நாட்டு/வெளிநாட்டு Doctor, Engineer மற்றும் தராதரமுடைய மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. எமது நிறுவன உறுப்பினர்கள் 12, 13, 14ஆம் திகதிகளில் யாழ்.கிளைக் காரியாலயத்தில் பணியாற்றுவர். விரும்புவோர் விவரங்களுடன் சௌபாக்கியா, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. T.P.: 6779 நேரில் தொடர்பு கொள்ளவும் மேலதிக விவரங்களுக்கு - கல்யாண மாலை திருமண சேவை, கொழும்பு. T.P. 338162, Fax: 338161. (42957)

---

பளை, பூநகரி வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதர்களிடமிருந்து

## விண்ணப்பங்கள் கோரல்

பளை, பூநகரி வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 31-03-2005

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

மா.சு.சே.பி.பணிப்பாளர், கிளிநொச்சி.

தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பளை, பூநகரி வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.

*வைத்திய கலாநிதி* த.சத்தியமூர்த்தி,
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-41460)(26-14-18)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மண் மகிழ — கண் நெகிழ

02 — 12

08 — 02

1944 — 2005



அமரர்

### கந்தையா தனபாலசிங்கம்

திங்களொன்று சென்றதையா தீருமோ எம்துயர்
அங்கமெல்லாம் நொந்தழுது அரற்றுகிறோம் –நாம்
பங்கமேது மில்லாது பார்மிசை எமை வளர்த்தாய்
எங்கள் துயர் துடைக்க எழுந்தோடி வாராயோ?

அன்னாரின் நினைவாக இன்று (14.03.2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

190 ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(43028)(52-45-15)

## மாதாந்த உதவிப்பணம் மீளாய்வு ஆரம்பம்

வலி.மேற்கு,மார்ச்14

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் விவரம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சமூக சேவை உத்தியோகத்தரினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறும் மீளாய்வுக்குச் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (3-175)

## தாச்சிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - துர்க்கா வி.க.எதிர் அருள் வி.க.

★மாலை 5 மணி - தென்றல் வி.க. எதிர் ஆனந்தா வி.க. (3-190)

## சட்டவிரோதமாக இறைச்சி விற்றவருக்கு அபராதம்

கொடிகாமம்,மார்ச்14

சட்ட விரோதமாக 50 கிலோ மாட்டிறைச்சி விற்பனை செய்யப்பட்டமை கொடிகாமம் பிரதேச சுகாதாரப் பரிசோதகரின் திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சட்டவிரோத இறைச்சி விற்பனையைத் தடைசெய்த அவர், சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதனையடுத்து, சட்டவிரோதமாக இறைச்சி விற்றவருக்கு 2ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. கைப்பற்றப்பட்ட இறைச்சி பொதுமக்கள் முன்னிலையில் நஞ்சூட்டி அழிக்கப்பட்டது. (த-74)

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி முருகையா (முத்து)



தச்சந்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி முருகையா (முத்து) அவர்கள் நேற்று (13-03-2005) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய நாகமணி - அன்னப்பிள்ளை ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் மருமகனும் ஞானராணியின் (சாந்தம்) அன்புக் கணவரும் அனுஜா, அகிலா, பரிஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-03-2005) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*214, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி.41471)(46-14-18-26)

தகவல்:
ஞானராணி
(சாந்தம் - மனைவி).

## செல்லையா குணசிங்கம் (பாலு)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குணசிங்கம் அவர்கள் 07-03-2005 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் யோகலட்சுமி, காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் குலோதுங்கம், - காலஞ்சென்ற நீலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயசிறி (கனடா), கௌரி (வவுனியா), வசந்தன் (நோர்வே), தேவகி (பிரான்ஸ்), பாஸ்கரன் (நோர்வே), கணேசன் (பிரான்ஸ்), ரேணுகா (உடுவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-03-2005) திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெற்று, அவரது பூதவுடல் பிற்பகல் 3மணிக்கு பிரான்ஸில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு,*
*நீர்வேலி.* (43067)(26-14-18)

தகவல்:
செ.குணரத்தினம்
(சகோதரன்).

---

*பன்னிரண்டாம் அகவையினைப் பூர்த்தி செய்யும்*

## கிராமிய அபிவிருத்தி வங்கி




அரச வங்கிகள் வடகிழக்குப் பகுதிகளில் 1990ம் ஆண்டிலிருந்து மக்களுக்கு கடன் வழங்குவதற்கு மறுத்தபோது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உற்பத்திக்குழுப் பகுதியின் **கிராமிய நிதியம்** என்ற நாமத்துடன் 13.03.1993இல் விவசாயக் கடன் வழங்கலுடன் ஆரம்பமான இவ் நிறுவனம் 2001ம் ஆண்டு **கிராமிய அபிவிருத்தி வங்கி** என்ற புதிய நாமத்துடன் வன்னி மக்களின் பொருளாதாரமேம்பாட்டிற்கு உற்ற தோழனாக விளங்கி தனது பன்னிரண்டாவது அகவையை பூர்த்தி செய்யும் வங்கி மென்மேலும் விரிவாக்கம் பெறவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

*"கிராமிய அபிவிருத்தி வங்கி*
*முயற்சியாளரின் குடும்ப வங்கி."*

*யாழ் மாவட்டம்.*

**வழமைதாரர்**

---

உ
சிவமயம்

## தசாக கிருகயஜ்ஞ அழைப்பு



*அன்புடையீர்!*

*நிகழும் தாரண வருடம் மாசிமாதம் 21ஆம் நாள் (05-03-2005) சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி*

### அண்ணாசாமி ஐயர் இலட்சுமி அம்மாள் [நல்லம்மா]

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

14-03-2005 திங்கட்கிழமை தசாகம் காலை 10.00 மணி
15-03-2005 செவ்வாய்க்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
16-03-2005 புதன்கிழமை சபிண்டீகரணம்
17-03-2005 வியாழக்கிழமை கிருகயஜ்ஞம் *(மதியபோசனம்)*

கிரியைகள்: பிரம்மஸ்ரீ ஐ.ஞானகுரு அவர்களால் நடத்தி வைக்கப்படும்.

மேற்படி கிரியைகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"பிரேமச்சந்திர வாசா",
துன்னாலை, கரவெட்டி.

T.P.: 0777895700,
0773131330
(4304)(46-14-18-26)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

**உதயன்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இது அபத்தப் போக்கு!

தமது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் கடைசி ஆட்சிக்கால எல்லையில் - அந்தத்தில் - நிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்து என்ன அரசியல் நகர்வை -நடவடிக்கையை - எடுக்கப் போகின்றார் என்பது குறித்துத் தென்னிலங்கை ஊடகங்கள் பல்வேறு ஊகச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

கடந்த வார முற்பகுதியில் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற தமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் மாநாட்டில் உரையாற்றிய ஜனா திபதி குமாரதுங்க சமஷ்டி முறையின் கீழான அதிகாரப் பகிர்வுக்கு நாட்டு மக்களில் பெரும்பாலானோர் ஆதரவு தருகின்றனர் என்றும்-

இதுபற்றி இன்று ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினால் குறைந்தது 85 வீதமான மக்களாவது இதற்கு ஆதரவு தருவர் என்றும் - அறிவித்தார்.

தனது உயிரைப் பணயமாகவும் ஜனாதிபதிப் பதவியைப் பந்தயமாகவும் வைத்து சமஷ்டிமுறைத் தீர்வை முன்னெடுக்கத் தாம் தயாராக இருக்கின்றார் என்று அவர் அங்கு அறிவித்தார்.

இப்படி அவர் அறிவித்திருப்பதால் சமஷ்டி முறைத் தீர்வுக்கு மக்களின் அனுமதியையும் அங்கீகாரத்தையும் உத்தியோகபூர்வமாகப் பெறுவதற்கான கருத்துக் கணிப்பு ஒன்றை - சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை - விரைவில் அவர் நடத்துவார் என்ற ஊகத்தைத் தென்னிலங்கை ஊடகங்கள் வெளியிடுகின்றன. அவ்வாறு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரத்தில் மக்களின் கருத்தைச் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் கோரும் அதிகாரம் அரசமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மையே.

ஆனால், அவ்வாறு சமஷ்டித் தீர்வு முறைக்கு மக்களின் கருத்தை - ஆதரவைக் கோரும் ஒரு தேவை - இப்போது இருக்கின்றதா? அவ்வாறு அந்த முயற்சிக்கு மக்களின் இணக்கத்தை இவ்வாறு சட்டரீதியாகப் பெறுவதால் வேறேதேனும் நன்மை உண்டா? - என்றெல்லாம் கேள்வி எழுப்பிப் பார்த்தால் இந்த முயற்சி தேவையற்றது என்றே பதில் வரும்.

சரியோ, பிழையோ ஆகக் குறைந்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வின் மூலமாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது குறிப்பிடுவதுபோல, நாட்டின் மிகப் பெரும்பாலான மக்கள் ஏற்றுள்ளனர். அதனை உணர்ந்து, ஏற்று, பகிரங்கமாக அறிவித்து, ஒப்புக்கொள்ள ஜனாதிபதிக்குத்தான் காலதாமதமானதே தவிர, பொது மக்கள் மத்தியில் இது விடயத்தில் இரண்டு கருத்து என்ற பேச்சுக்கே இடமில்லை; இடமிருக்கவில்லை.

சமஷ்டித் தீர்வுக்கு ஆக சிங்கள - பௌத்த மேலாண்மை வாதப் போக்குடைய ஜே.வி.பி., சிஹல உறுமய, நாட்டுப் பற்றுடைய (?) தேசிய இயக்கம் போன்ற ஒரு சிலவே எதிர்ப்பு.

சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவாக ஒஸ்லோப் பிரகடனத்தில் ஒப்பமிட்ட தமிழீழ விடுதலைப் புலிகளோ, ஐக்கிய தேசியக் கட்சியோ மற்றும் தமிழர் தேசியக் கூட்டமைப்போ இத்திட்டத்தை முழுமையாக ஆதரிக்கும். எதிர்க்கமாட்டா என்பதால் சர்வஜன வாக்கெடுப்பு வைத்துத்தான் இத்திட்டத்துக்குப் பெரும்பான்மை மக்களின் ஆதரவுண்டு எனப் பறைசாற்ற வேண்டிய தேவையில்லை.

ஒஸ்லோவில் இலங்கை அரசு - புலிகள் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக - சமஷ்டி அடிப்படையில் - ஒரு தீர்வு எட்டப்படுவதை முஸ்லிம்களும் பெருமளவில் எதிர்க்கமாட்டார்கள் என எதிர்பார்க்கலாம்.

அத்தோடு, சர்வஜன வாக்கெடுப்பு வைப்பதன் மூலம் இத்தகைய சமஷ்டித் தீர்வு நடவடிக்கைக்குச் சட்ட அந்தஸ்து பெற்றுக்கொடுத்து விடவும் முடியாது. அதற்கு முதலில் நாடாளுமன்ற ஆதரவுதான் - மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுதான் - அவசியம்; கட்டாயம்; அத்தியாவசியம்.

சமஷ்டி அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை எதிர்க்கின்ற பேரினவாதிகளைத் தமது கூட்டமைப்பில் சேர்த்து, ஊக்குவித்து, தூக்கிவிட்டதன் மூலம் அத்தகைய போக்குடையவர்களின் நாடாளுமன்றப்பலம் கணிசமான அளவு உயரவும் -

சமஷ்டித் தீர்வுக்கு எதிரான சக்திகளின் கைகள் ஆட்சி அதிகாரத்தில் பலம் பெறவும் -

வழிசெய்தவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் அக்கட்சியுடன் சேர்ந்து ஏற்கனவே கூட்டமைத்து ஓர் அணியாக இயங்கிய பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் தான்.

இவ்வாறு சமஷ்டித் தீர்வுக்கு எதிரான - தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற தீர்வொன்றை வழங்குவதைக் கடுமையாக எதிர்க்கின்ற -பேரினவாத மேலாண்மைப் போக்குடைய இன வெறியர்களைத் தூக்கி விட்டுவிட்டு - அவர்களுடன் சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டு - ஆட்சியை அவர்களோடு சேர்ந்து தொடர்ந்து கொண்டு - சமஷ்டித் தீர்வுக்கு மக்கள் ஆதரவு இருப்பதால் அதைத் தொடர்வேன் என ஜனாதிபதி கூளுரைப்பது சுத்த அபத்தம்.

அப்படி சமஷ்டி முறையின் கீழ் தீர்வுகாணும் உண்மையான எண்ணம்- நோக்கம் - விருப்பம் - ஆசை - அவா- ஜனாதிபதிக்கு இருக்குமானால், முதலில் அந்தத் தீர்வு முறையைக் கடுமையாக எதிர்க்கும் பங்காளிகளைத் தமது அரசிலிருந்து அவர் வெளியேற்ற வேண்டும். அப்படிச் செய்துவிட்டு, தமது தீர்வு முயற்சியை அவர் முன்னெடுப்பாரானால் அதில் நியாயம் ஏதும் இருக்கும்.

குழப்பக்காரர்களுடன் கூட்டு வைத்துக் கொண்டு அந்தக் கூட்டமைப்பு அரசின் மூலம் தீர்வு காண்பேன் என ஜனாதிபதி கூளுரைப்பது வெறும் 'பம்மாத்து' வேலையன்றி வேறில்லை.

# நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட்டால்தான் விவசாயிகள் தலைநிமிர்ந்து நிற்கலாம்

## விவசாய வங்கி திறப்பு விழாவில் அரச அதிபர் கணேஸ்

அச்சுவேலி,மார்ச்14

யாழ். மாவட்டத்தின் நிலக்கீழ் நீர்வளம் உரியமுறையில் பாதுகாக்கப்பட்டால்தான் விவசாயிகள் தமது உற்பத்தி முயற்சிகளில் தலைநிமிர்ந்து நிற்கமுடியும். நிலக்கீழ் நீர்வளத்தை எதிர்காலச்சந்ததியின் பயன்பாட்டிற்கும் ஏற்புடையதாகச் சேமிக்கின்ற நவீன நடைமுறைகளில் விவசாயிகள் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும்.

- இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ்.

யாழ். மாவட்டத்தில் முதலாவது விவசாய வங்கியின் திறப்புவிழா புத்தூர் கமநலசேவை நிலையத்தில் யாழ். மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில் நடைபெற்றது.

திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் உரையாற்றினார். அவர் கூறியதாவது:-

கடந்தகாலப் போர்ச் சூழலில் உற்பத்தி நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டுப் பட்டினிச்சாவிலிருந்து மக்களை மீண்ட விவசாயிகளின் வசதிகள், தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். அந்தவகையில் தான் இந்த விவசாய வங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் மூலம் எமது தேவைகளை நிறைவுசெய்வதோடு, சேமிப்பு முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்காகப்பணத்தை மட்டும்சேகரித்தால் போதாது. எமது மூல வளங்களையும் சேகரித்து வைக்கவேண்டும்.

யாழ். மாவட்டத்தின் மூலவளங்களில் நிலக்கீழ் நீர்வளம் முக்கியமானது. நிலக்கீழ் நீர்வளம் இல்லாமல் இருந்திருந்தால் நாம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.

நிலக்கீழ் நீர்வளத்தைப் பாதுகாப்பதன்மூலம் எதிர்காலச்சந்ததிக்கு உதவுதல் வேண்டும். நிலக்கீழ் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான நவீன நடைமுறைகளை விவசாயிகள் உடனடியாகப் பின்பற்ற முன்வரவேண்டும்.

நாம் மக்கள் மத்தியில் முன்னெடுக்கும் திட்டங்களைத் திட்டமிட்டு, செயற்திறன் மிக்கதாக, ஆர்வத்தோடு, எதிர்கால நன்மையைக் கருத்திற்கொண்டு நிறைவுசெய்ய வேண்டும். அப்பொழுதுதான் முழுமையான பயனைப் பெறமுடியும்.

யுத்தத்தினால், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் திட்டமிடப்பட்டு வருகின்றன. அவை நிறைவுசெய்யப்படவேண்டும் - என்று அரச அதிபர் தெரிவித்தார்.

வலி.கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் உரையாற்றும்போது கூறியதாவது:-

உலக நாடுகள் நவீன முறைகளைக் கையாண்டு விவசாயத்துறையில் முன்னேறி வருகின்றன. எமது பிரதேச விவசாயிகள் நவீன முறைகளை ஏற்றுக்கொள்வதில் ஆர்வமின்றி இருந்து வருவதனால் விவசாயத்தில் எதிர்பார்த்தளவு முன்னேற முடியாத நிலை காணப்படுகின்றது.

எமது விவசாயிகள் நவீன பயிர்ச் முறைகளை, புதிய கருத்துக்களை உள்வாங்கி முன்னேறவேண்டும். விவசாயத்துறையின் முன்னேற்றம் எமது இனத்தின் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையமுடியும் எனக் கூறினார். (ஐ-11)

# புத்தூர் விவசாய வங்கியில் வழங்கிய வைப்புச் சான்றிதழ் தனிச்சிங்களத்தில்

## விவசாயிகள் ஆட்சேபம்; தமிழில் தர நடவடிக்கை

அச்சுவேலி, மார்ச் 14

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக புத்தூரில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய வங்கியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் தனிச்சிங்களத்தில் காணப்பட்டன. இதற்கு விவசாயிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து அவற்றைத் தமிழில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வைப்புச் சான்றிதழ்களைத் தமிழ்மொழியில்வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகக் கமநலசேவை ஆணையாளர் க.சுந்தரேசன் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாகப் புத்தூர் கமநல சேவை நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட விவசாய வங்கியினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களே தனிச்சிங்களத்தில் காணப்பட்டன. வைப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் மொழி மூலம் குறித்து ஆட்சேபம் தெரிவித்தனர். ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட கமநலசேவை உதவி ஆணையாளர், குறுகியகால இடைவெளியில் தமிழ்மொழி மூலமான சான்றிதழ்களை வழங்கிச் சிங்களத்தில் வழங்கிய வைப்புச் சான்றிதழ்களை மீளப் பெறுவதாக வாக்குறுதியளித்தார். (ஐ-11)

# நள்ளிரவு மணல் கடத்திய லொறியை பொலீஸார் துரத்திப் பிடித்தனர்

## பொற்பதி வீதிப் பகுதியில் சம்பவம்

இருபாலைப் பகுதியில் இருந்து மணல் கடத்தி வந்ததாகக் கூறப்படும் லொறி ஒன்றைக் கடந்த சனிக்கிழமை நள்ளிரவுவேளை கோப்பாய்ப் பொலீஸார் மடக்கிப் பிடித்தனர்.

கோப்பாய்ப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான பொலீஸ் அணி, இரவு ரோந்து சென்ற சமயம் சந்தேகத்துக்கிடமான லொறி ஒன்றைக் கண்டு சமிக்ஞை செய்து அதனை நிறுத்த முயன்றது. எனினும், அந்த லொறி உத்தரவை மீறி நிறுத்தாமல் செல்லவே பொலீஸார் அதனைப் பின் தொடர்ந்து துரத்திச் சென்றனர்.

கொக்குவில் பொற்பதி வீதியில் வேகமாகச் சென்ற அந்த லொறி, கட்டுப்பாட்டை மீறி மதகு ஒன்றுடன் மோதி நின்றது. அதிலிருந்த சாரதியும் வேறு சிலரும் இறங்கி ஓடித்தப்பினர்.

மணல் ஏற்றப்பட்டிருந்த அந்த லொறியைப் பொலீஸார் கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (ஐ)




தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பெண்கள் தொண்டர் சபையின் வெள்ளிவிழா ஆலய துர்க்கா மணிமண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் தலைமை உரையினை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றுவதையும் மேடையில் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், யாழ்.பல்கலைக்கழகநுண் கலைப்பீட விரிவுரையாளர் திருமதி எ.என்.கிருஷ்ணவேணி ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்தில் காணலாம். இராம நாதன் நுண்கலைப் பீடமாணவிகள் வழங்கிய நாட்டிய நிகழ்வின் ஒரு காட்சியை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: நேசன்)

### உதயவாக்கு

பல இயல்பு வாய்ந்த நண்பர்களின் தொடர்பைவிடத் தேர்ந்தெடுத்த சில நூல்களின் உறவு நமக்குப் பயனளிக்கும்.

- பாரதி கால்டன்

### நாளை

*பங்குனி 02*
*செவ்வாய்க்கிழமை*
*15.03.2005*
திதி : *பஞ்சமி*
*பிற்பகல் 12.32 வரை*
நட்சத்திரம் : *கார்த்திகை*
*பின்னிரவு 5.45வரை*
*கார்த்திகை விரதம்*
*சுபநேரம் : 10.50 - 12.20*
*ராகுகாலம் : 3.20 - 4.50*
*(யாவும் பழைய நேரப்படி)*

# துர்க்காதேவி தொண்டர் சபையில் சிறப்புற நடைபெற்ற வெள்ளிவிழா

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழா கடந்த 6 ஆம் திகதி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

பெண்கள் தொண்டர் சபைத் தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் துர்க்கா மணி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருமுறை ஓதுதலைத் தொடர்ந்து திருமதி இந்திரா ஸ்ரீரங்கநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் மற்றும் ஆறு.திருமுருகன், செல்வி பாலகி சிவசுப்பிரமணியம் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் ஆனந்தஜோதி தர்ஷனனின் மாணவிகளின் நாட்டிய அர்ப்பணமும் இடம்பெற்றது. (த-86)

# தொல்புரம் மருந்தகத்தில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

தொல்புரம், பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மருந்துப் பற்றாக்குறையினால் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களில், அதிக விலைகொடுத்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளது. உரியவர்கள் மருந்தகத்திற்குரிய மருந்துகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (த-ரி-204)

## பாடநூல்கள் வந்து சேர்ந்தன

சாவகச்சேரி,மார்ச்14

தரம் 7 மாணவர்களுக்கான பாடநூல்கள் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சென்று பாடநூல்களைப் பெற்றுச் செல்லுமாறு சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் தெரிவித்தார். (த-31)

## பயிலுநர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புகைப்பட நிறுவனம் ஒன்றிற்கு பயிலுநர்கள் தேவை. N.A.B ஊடாகப் பயிற்சியும், படியும் கொடுக்கப்படும். 25 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் 31.03.2005 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. **2520**
C/o. உதயன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(42944)(42-14-18-26)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 06 - 1946



உதிர்வு 14 - 03 - 2000

**அமரர் தம்பிமுத்து மாசிலாமணி (வவா)**

*எமதருமை அப்பாவே!*

நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு
நிலையான தொன்று இங்கு இல்லை
எம் நெஞ்சுருக கண்ணீரைக் காணிக்கையாக்கி
அஞ்சலிக்கின்றோம்.

திருக்குடும்ப கோயிலடி,
மல்வம், உடுவில்.
(43066)(26-14-18)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

தோற்றம் 01 - 08 - 1934



மறைவு 12 - 02 - 2005

**அமரர் மாணிக்கம் சேனாபதி** (சாரதி)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து இன்று மீளாத் துயிலுக்குச் சென்றுவிட்ட எம் ஆருயிர்த் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (14-03-2005) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்துடன் தொடர்ந்து இடம்பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆதியாமலை,
உடுப்பிட்டி.
(43046)(26-14-18)
- குடும்பத்தினர்.

## நெடுந்தீவில் ஒருங்கிணைப்புக் கூட்டம்

நெடுந்தீவு,மார்ச்14

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவின் மாதாந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உதவி அரச அதிபர் எம்.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் போக்குவரத்து, சுகாதார வைத்திய சேவைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-112-203)

## அழகெழல் போட்டிகள்

யாழ்தேசியக் கல்வியியற் கல்லூரியின் நுண கலை மன்றம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தும் அழகெழல் போட்டிகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

ஓவியப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் மூன்று போட்டியாளர்களுக்கு மேற்படாமல் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும் எனவும் -

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான விண்ணப்ப முடிவுதினம் எதிர்வரும் 20ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-203)

## தேவை

எமது ஸ்தாபனத்துக்குப் பின்வருவோர் தேவை.

▲ கணக்காளர் ▲ விற்பனையாளர்
▲ ரக் சாரதி ▲ காசாளர் (பெண்)

உடன் நேரில் வரவும்.

**பேப்பர் கவுஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-41463)

## தேவை

எமது நிறுவனத்தில் கணக்குப் பதியுநராகக் கடமையாற்ற பெண் பணியாளர்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். (அனுபவம் உள்ளவர்கள், நகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 4590008 (43042)

## தையல் வேலைக்கு ஆள் தேவை

எமது நிறுவனத்துக்கு ஆண்களுக்குரிய ஆடைகள் தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்களும் வேலை பழக விரும்புவர்களும் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:
**சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்**
73, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 286069. (43051)

**DIPLOMA IN BUSINESS ENGLISH**
BY TOP LECTURER
British Business School
**B.B.S** 140,Temple Road, Jaffna 021-2225796

## பதவி வெற்றிடம்

ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்திற்கு
காப்புறுதி முகவர்கள் வெற்றிடம்
உடன் நிரப்புவதற்குத் தேவை.

கல்வித் தகைமைகள்: க.பொ.த. சாதாரணதரம் (கணிதம் முக்கியம்)
க.பொ.த. உயர்தரம்

வயதெல்லை: 18 - 55 வரை

வேறு காப்புறுதி நிறுவனங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் வேலைசெய்வோரும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் 14-03-2005 இல் இருந்து ஞாயிறு தவிர்ந்த 22-03-2005 வரை கீழ் உள்ள முகவரிக்கு நேர்காணலுக்காகச் சமுகந்தரலாம்.

**ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**
55, **R.G.** கட்டடம், கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 6325, 6326.

(43036)(26-14-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது சித்த மருத்துவத்துறையின் மாணவர்
(ஒன்றியப் பொருளாளர்)
செல்வன் உதயனின அன்புத் தந்தையார்

**ஐயாத்துரை சாரங்கபாணி**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்கள் (11-03-2005) காலமானதையிட்டு நாம் மிகவும் கவலை அடைகின்றோம். பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

(43047)(26-14-18)

## மரண அறிவித்தல்கள்

### கனகசிங்கம் கலைச்செல்வம்

(பிரான்ஸ் உயிர்நிழல் ஆசிரியர், பள்ளம், எக்ஸில் நூல் வெளியீட்டாளர், இலக்கியவாதி, திரைப்பட நடிகர்)



வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரானஸை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் கலைச்செல்வம் அவர்கள் 05-03-2005 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கம் - ஆச்சிப்பிள்ளை (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மகனும் நாகலட்சுமியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் கருணாகரன் (கனடா), கலாநிதி (லண்டன்), கெங்காதரன் (பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கபிலனின் (பிரான்ஸ்) சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் (Crematorium du pere Lachaise, 16, Rue du repos - 75020 Paris, Metro Gambetta) இன்று (14-03-2005) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய். (43059)(26-14-18)

தகவல்:
க.திருநாவுக்கரசு J.P.

### கோவிந்தபிள்ளை யோகம்மா

(சங்கத்தானை - சாவகச்சேரி)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும கொண்ட கோவிந்தபிள்ளை யோகமமா (யோகக்கா) 12-03-2005 சனிக்கிழமையன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தையல்முத்து ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளையின் அன்பு மனைவியும் செல்வராசா, காலஞ்சென்ற செல்வராணி, சிதம்பரராசா, சீராளதேவன், அற்புதராணி, அருள்ராணி சிவரஞ்சன், கணேசவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜலக்சுமி, காலஞ்சென்ற சொக்கலிங்கம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி, அருள்ராணி (ஆசிரியை, யா/சா. மகளிர் கல்லூரி), எலிசபெத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வேந்திரகுமாரி (ஜேர்மனி), காலஞ்சென்ற ராஜேந்திரகுமார், ஜிதேந்திரகுமார், காந்தகுமாரி, ரகுதேவ் (சுவிஸ்), தேவ்ஆனத் (சுவிஸ்), ஆனந்தீஸ்வரி (சுவிஸ்), ஈஸ்வரதேவன் (சுவிஸ்), நந்தீஸ்வரன் (லண்டன்), அகிலேஸ்வரி, கோமலதன், கவிந்தினி, விஹுந்திரன், யோகரன், ஜெகந்தினி, கோவர்த்தனன், துளசிகரன், நவநிதி, மலர்வண்ணன், துஸ்யந்தன், சந்திரிகா, கிஸ்யந்தன், டெஸ்யந்தன், கேதுசன், கிருஸ்ணராணி, கோபி (பிரான்ஸ்), கோமதி, பவன், செல்வா, பிரசாத், முரளி, காந்தன், வேள், ஆனந், அபிராமி, அரவிந்தன், அபர்னா, அபிசன், கிவின் (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாயுஜன், பிரகாஸ், துஷீப், றொஸானி, நிஸானி, கிருஸன், விதுஸா ஆகியோரின் அன்புப் பூட்டியும் அன்னலக்சுமி, காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, கதிராசிப்பிள்ளை, முருகேசு, கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-03-2005) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*கந்தசுவாமி கோயிலடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*
T.P.: 0776054486,
0776163480
(43061)(46-14-18-26)

தகவல்:
கோ.சிவரஞ்சன் (மகன்),
கோ.முரளி(பேரன்).

## "காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

உங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பூர்த்திசெய்ய அழையுங்கள்
0777 563781

வடமராட்சி வாடிக்கையாளர்கள் தங்கள் 3 ஆம் நபர் [வாகன] காப்புறுதிகளுக்குத் தொடர்புகொள்ளுங்கள்.

**ஆதவன் ஸ்ரோர்ஸ்,**
வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

அமைப்பாளர் (1618),
**சிறிலங்கா இன்சூரன்ஸ்.**

(42748) (39-14-18-26)

# வடக்கில் புலிகளின் முழுப்பங்களிப்புடன் விளையாட்டுத்துறை முன்னேற்றமடையும்

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் நம்பிக்கை



**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் 7 ஆவது ஆண்டுதின நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் லயன் மொஹான் டி சில்வா யாழ்ப்பாணம் வந்திருந்தார்.**

**கிரிக்கெட் துறையின் அபிவிருத்தி தொடர்பாக அவர் உதயனுக்கு அளித்த பிரத்தியேக செவ்வி இது.**

❑ *கேள்வி:* கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவராகப் பதவியேற்றுள்ளீர்கள். கிரிக்கெட் துறையை அபிவிருத்தி செய்வதற்கு என்ன திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளீர்கள்?

✪ *பதில்:* கிரிக்கெட் துறையை அபிவிருத்தி செய்ய மூன்று வகையான திட்டங்களை வகுத்துள்ளோம். உடனடித் திட்டம், இடைக்கால. நீண்டகாலத் திட்டங்கள் என மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தவுள்ளோம். இந்தத் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

மாவட்ட மட்டத்தில் கழகங்கள், பாடசாலைகளை ஊக்குவிப்புச் செய்வதுடன் கட்டுமானப் பணிகளையும் முன்னெடுக்கவிருக்கின்றோம்.

மைதானங்கள், பார்வையாளர் அரங்கு ஆகியவற்றை அமைத்து விளையாடுவதற்கான அடிப்படைச் சூழலை உருவாக்கவிருக்கின்றோம். இத்தகைய சூழல் உருவாக்கப்படும் போது மேலும் மேலும் வீரர்கள் இத்துறையில் நாட்டம் கொள்வர்.

❑ *கேள்வி:* வடக்கில் எந்த பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கப் போகிறீர்கள்?

**கிளிநொச்சியை இனங்கண்டுள்ளோம்**

✪ *பதில்:* இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியமான இடமாக கிளிநொச்சியை இனங்கண்டுள்ளோம். அந்தப் பிரதேசத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்த 70 ஏக்கர் நிலத்தை இனங்கண்டு, அதை நேற்றுமுன்தினம் பார்வையிட்டுள்ளேன்.

இந்தக் காணியை அரசு எமக்கு ஒதுக்கித் தந்துள்ளது. அதில் முதலில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிடம் வழங்க 50 வீடுகளை அமைக்கவிருக்கின்றோம். அத்துடன், அந்தப் பகுதிக்குச் சமீபமாக சாதாரணமாக கிரிக்கெட் விளையாடுவதற்குரிய மைதனாம் புனரமைக்கப்படவிருக்கின்றது.

நீண்டகாலத் திட்டத்தின் கீழ் அந்த மைதானத்தைச் சர்வதேச தரத்தில் கொண்டுவரும் நோக்குடன் அதனைப் புனரமைக்க எண்ணியுள்ளோம்.

❑ *கேள்வி:* இந்தத் திட்டத்துக்கு எவ்வளவு நிதி ஒதுக்க உத்தேசித்துள்ளீர்கள்?

✪ *பதில்:* ஆரம்பக்கட்டமாக 20, 30 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளோம். அதில் மைதானம் திருத்தப்படும். தொடர்ந்து சர்வதேச தரத்துக்கு அந்த மைதானத்தை அமைக்க மேலும் நிதி ஒதுக்கப்படும்.

❑ *கேள்வி:* இந்த வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

✪ *பதில்:* மிக விரைவில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும். இந்தக் காணிக்கான வரைபடங்களை அரச அதிபர் சமர்ப்பித்த பின்னர் பணிகள் ஆரம்பமாகும். அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் வீடமைக்கும் பணி ஆரம்பமாகும் அதன் பின் மைதான வேலைகளை ஆரம்பிப்போம்.

❑ *கேள்வி:* இத்திட்டங்களை முன்னெடுக்க விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கின்றதா?

✪ *பதில்:* விடுதலைப் புலிகள் முழு ஒத்துழைப்பையும் எமக்கு வழங்குகிறார்கள். விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினேன். சர்வதேச விளையாட்டு வீரன் எதிர்வீரசிங்கத்தையும் அங்கு சந்தித்தோம்.

விளையாட்டை அபிவிருத்தி செய்வதில் அவர்கள் காட்டும் ஆர்வத்தை அப்போது உணர்ந்தேன். என்னுடன் சேர்ந்து விளையாட்டு மைதானம் அமையவிருக்கும் இடத்தைப் பார்வையிட அவர்கள் வந்திருந்தனர். இந்தப் பிராந்தியத்தில் விளையாட்டுத்துறை முன்னேற்றத்துக்கு அவர்கள் நல்ல பங்கு வழங்குகிறார்கள். அவர்களின் பங்களிப்பில் விளையாட்டுத்துறை நல்ல முன்னேற்றத்தை அடையும் என நம்புகிறேன்.

❑ *கேள்வி:* யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் துறை அபிவிருத்தி எந்த நிலையில் உள்ளது.

**யாழ்.மாவட்ட அபிவிருத்தி**

✪ *பதில்:* யாழ்.மாவட்டத்தில் கூடுதலான பாடசாலைகள், கழகங்களுக்கு ஊக்குவிப்பு வழங்கவிருக்கின்றோம். பல வசதிகளை வழங்க உத்தேசித்துள்ளோம்.

கொங்கிரீட் விக்கட்டுடன் 'அஸ்ரா ரேவ்' வழங்கவிருக்கின்றோம். மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த மாதம் இங்கு வரவிருக்கின்றது.

யாழ்.கிரிக்கெட் சங்கத்துடன் திட்டங்கள் குறித்து இக்குழு ஆராயவிருக்கின்றது.

❑ *கேள்வி:* யாழ்ப்பாணத்தில் சிறந்த வீரர்கள் இருந்தபோதும் சர்வதேச மட்டத்தில் அவர்கள் செல்வதற்கு வாய்ப்புகள் கிட்டுவதில்லை என முறைப்பாடு கூறப்படுகின்றது. அது குறித்து.?

**யாழ்.வீரர்கள் கொழும்பில் விளையாட வசதிகள் தருவோம்**

✪ *பதில்:* இங்கு நல்ல வீரர்கள் முன்னர் இருந்தனர். அவர்கள் சர்வதேச போட்டிகளிடம் பங்குபற்றியுள்ளனர். அண்மைக் காலத்தில் நடந்த பிரச்சினைகளால் யாழ்ப்பாணம் பின் நோக்கிச் சென்றுவிட்டது. இப்போது காலம் கனிந்துள்ளது. யாழ்.மாவட்டம் தரும் கிரிக்கெட் வீரர்கள் கொழும்பு வந்து, கழகங்களில் இணைந்து விளையாடலாம். பாடசாலை மாணவன் தேசிய மட்டத் துக்கு விளையாட முடியாது. அது கஷ்டமான விடயம். எனவே. கழக வீரர்கள் கொழும்பில் கழகங்களுடன் இணைந்து விளையாடவேண் டும். அதில் முன்னேற்றம் கண்டு. அடுத்த 5,6 வருடங்களுக்குள் யாழ். வீரர்கள் சர்வதேச அணியில் இடம்பெற வாய்ப்புக் கிட்டும். *(12 ஆம் பக்கம் பார்க்க)*

**செவ்வி: குகா**
**படம்: பிரபா**

## விறுவிறுப்பாக நடந்த நாயகர்களின் போர்

வலி.வடக்கு,மார்ச்14

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற நாயகர்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இப்போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில் ஐந்தாவது போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூன்று ஓட்டங்களினாலும் ஆறு விக்கெட்டுக்களினாலும் முதல் தடவையாக வெற்றியைப் பெற்றுள்ளது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

இரு அணித் தலைவர்களும் பூவா தலையா போட்டத்தைத் தொடர்ந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி மகாஜனாக் கல்லூரியைத் துடுப்பெடுத்தாட வேண்டிக்கொண்டது.

மகாஜனாக் கல்லூரியினர் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து முதல் இன்னிங்ஸில் 130 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் மகாஜனாக் கல்லூரி வீரர்களான கே.மயூரன் 25ஓட்டங்களையும் ஆர். திலீபன் 20 ஓட்டங்களையும் ரி.ரஜீவ் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பந்து வீச்சில் எஸ்.சுஜீவன் 12.4 ஓவர்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் கே.நிரோஜன் 49 ஓட்டங்களையும் எஸ்.சுஜீவன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரி சார்பில் பந்துவீச்சில் வி.புலநேசன் 11.5 ஓவர்களில் இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 53 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டையும் ஆர்.திலீபன் 15 ஓவர்களில் ஓட்டமற்ற ஓவர்களுடன் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய மகாஜனாக் கல்லூரியினர் 147 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

ஆர்.தர்சன் 37 ஓட்டங்களையும் ஜே.ஜெயபிரிந்தன் 25 ஓட்டங்களையும் ரி.மயூரன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி விரர்களான ஜே.ஜெயகிருஷ்ணா 10 ஓவர்க்ளில் ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் வி.பாலகிருஷ்ணன் 7 ஓவர்களில் 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பாடத் தொடங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி, நான்கு விக்கெட்டுக்களை இழந்து உரிய இலக்கை அடைந்தது.

இதில் வி.ராஜீவன் 43 ஓட்டங்களையும் கே.நிஷாகரன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

போட்டி நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் கே.நிஷாகரன் (ஸ்கந்தா) தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பந்துவீச்சாளராக ஜே.ஜெயகிருஷ்ணா (ஸ்கந்தா), சிறந்த களத்துடுப்பாளராக வி.ராஜீவன் (ஸ்கந்தா), சகல துறை ஆட்டக்காரனாக ரி.மயூரன் (மகாஜனா) ஆகியோர் தெரிசெய்யப் பட்டனர்.

(3-86)

## சென்.பற்றிக்ஸ் அபார வெற்றி

வட்டுக்கோட்டை, மார்ச்14

பொன் அணிகளான யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கிடையேயான 88 ஆவது மோதல் பரப்பரப்பு ஏதும் இன்றி முடிவடைந்துள்ளது.

கடந்த வெள்ளி, சனி ஆகிய இருதினங்களும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னிக்கல் மைதானத்தில் நடந்த இந்த மோதல் விறுவிறுப்பாக அமையவில்லை என அவதானிகள் கூறுகின்றனர்.

முதல்நாள் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி விரைவாக ஓட்டங்களைக் குவித்து சகல ஓட்டங்களையும் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுப் பலமான நிலைக்குத் தன்னை நிறுத்திக்கொண்டது.

இதில் வி.விதுபாலன் 49 ஓட்டங்களையும் ஜே.அருண் 42 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஜே.சுரேன் 41 ஓட்டங்களையும் ஏ.ஜே.வின்சன் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே.சிவப்பிரகாசம் 53ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் பி.செந்தூரன் 44 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து சுருண்டு போனது. இதில் ஜே.செந்தூரன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

சென்.பற்றிக்ஸ் வீரர்களான வி.ஜே.லூட்சன் 19 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் ஏ.ஜே. வின்சன் ஏழு ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் பி.பத்மமுரளி எட்டு ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸைத் தொடருமாறு சென்.பற்றிக்ஸ் யாழ்ப்பாணக் கல்லூரியை அழைத்தது.

யாழ்ப்பாணக்கல்லூரி 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணியின் உப தலைவர் வி.நிருபரன் அதிரடி ஆட்டத்தில் 55 ஓட்டங்களைக் குவித்தார். ஆர். மயூரன் 35 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ்.சென்.பற்றிக் வீரர்களின் அபாரமான பந்துவீச்சில், பி.பத்மமுரளி 72 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் ஜே.சுரேன் இரண்டு ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

சென்.பற்றிக்ஸ் இன்னிங்ஸாலும் 25 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக ஏ.ஜே.வின்சன் (சென்.பற்றிக்ஸ்), சகலதுறை ஆட்டக்காரனாக வி.விதுபாலன் (சென்.பற்றிக்ஸ்), சிறந்த துடுப்பாட்டக்காரனாக வி.நிருபரன் (யாழ்ப்பாணக்கல்லூரி), சிறந்தபந்து வீச்சாளராக பி.பத்மமுரளி (சென்.பற்றிக்ஸ்), சிறந்த களத்தடுப்பாளராக ஆர். மயூரன் (சென்.பற்றிக்ஸ்), சிறந்த இணைப்பாட்டக்காரராக வி.நிருபரன் , ஆர். மயூரன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(3-161-190)

## விளையாட்டுக் கழகங்களுடன் இன்று சந்திப்பு

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான சந்திப்பு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக நகராட்சி மண்டபத்தில் தலைமையில் இடம் பெறவுள்ளது. இச்சந்திப்புக்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமை வகிப்பார்.

இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டிக்கான நிரல் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், விளையாட்டு அபிவிருத்தி சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளும்படி உடுவில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் வேண்டியுள்ளார்.

(3-86)





'நாயகர்களின் போர்' மோதலில் வெற்றிபெற்ற கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அணித் தலைவர் கே. கிருஷ்ண சந்திரா, பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் மா. சந்திரகாந்தாவிடம் வெற்றிக் கிண்ணத்தைப் பெறுவதையும் நிகழ்வுக்குத் தலைமை வகித்த மகாஜனக்கல்லூரி அதிபர் பொ. சுந்தரலிங்கம் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

# தமிழ் மொழியின் இருப்பை உறுதி செய்ய இணைந்து செயற்பட வேண்டிய காலம் இது


செ.தமிழேந்தி

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 50ஆவது அகவையை ஒட்டி விடுதலைப் புலிகள் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் வகுப்பறை மண்டபம் ஒன்றை அமைத்திருந்தனர். அந்த மண்டபத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் வைபவம் கடந்த வாரம் இடம்பெற்றது.**

**அந்த நிகழ்வில் தமிழீழ நிதிப்பொறுப்பாளர் செ.தமிழேந்தி முக்கிய உரையாற்றினார். அந்த உரைத் தொகுப்பின் முதலாவது பகுதி கடந்த சனிக்கிழமை உதயனில் வெளியாகியது. தொகுப்பின் இறுதிப் பகுதி இதுவாகும்.**

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் மொழிவாரியாக வந்து, பின்னர் மாவட்ட ரீதியாக மாறியது. மாவட்ட அடிப்படையிலான தரப்படுத்தல் ஓரளவுக்குத் தமிழருக்கு பின்தங்கிய பகுதிகளுக்கு நன்மை பயத்தது. ஆனால் ஒட்டுமொத்தமாக இங்கு தரப்படுத்தல் தமிழரை அழிப்பதற்குக் கொண்டு வரப்பட்டது. சில எதிர்ப்புகளினாலேயே விடுதலைப் போராட்டத்துக்கு பிளைகள் போகிறார்கள். அதைத் தடுப்பதற்காக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

இன்று அவர்கள் என்ன செய்கிறார்கள்? இன்றைய நிலையில் எதிர்த்துக் குரல் கொடுக்கவும் முடியாது. தரப்படுத்தலை நீக்குகின்ற போது தகுதியின் அடிப்படையில்தான் மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக் கொண்டு போகலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வரும்போது எப்படி நாங்கள் எதிர்க்க முடியும்?

இப்படியான அவல நிலையில் - சூழலில் - நாங்கள் இருக்கின்றோம்.

அடுத்தது இனமாற்றம். இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டில் நீர்கொழும்பில் 53 தமிழ் பள்ளிகள் இருந்தன. இன்று ஒரு பள்ளிதான் இருக்கின்றது. விஜயரத்தினம் இந்து மகா வித்தியாலயம் மட்டுமே இருக்கின்றது. அங்கு செயற்பட்ட பள்ளிகள் எல்லாம் சிங்களப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்த தமிழர்களை, தமிழ்பேசும் சிங்களவர்கள் என்று பதிவு செய்தார்கள். அங்குள்ள தமிழர்கள் தமிழ் பேசும் சிங்களவர்களாகினர். அந்தப் பள்ளிகளில் இருந்து தமிழாசிரியர்களை நீக்கிவிட்டு சிங்கள ஆசிரியர்களை கல்வி கற்பிக்க அமர்த்தி நீர்கொழும்பை முற்றாகச் சிங்கள மயமாக்கினர். இதே நிலைமை தான் சிலாபத்திலும் நடந்தது. இன்று இது மலையகத்தில் நடக்கிறது.

மலையகத்திலும் தமிழாசிரியர்களை நிறுத்திவிட்டு சிங்கள ஆசிரியர்களையே போட்டுக்கொண்டிருக்கிறார்கள். காலிப் பகுதியில் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அங்கேயிருக்கும் ஜே.வி.பி. அமைப்பினர் அங்கு இருக்கும் தமிழ்ப் பிள்ளைகளை சிங்களப் பள்ளிகளில் விட்டு சிங்கள மொழியில் படிப்பியுங்கள். தமிழில் படித்து என்ன பயன் என்று கேட்கிறார்களாம்.

அவர்களின் நோக்கம் என்னவென்றால், அங்குள்ள தமிழர்களைச் சிங்களவராக்குவது. இப்படி பல்வேறு வகையாக நாங்கள் அழிக்கபட்டுக் கொண்டுவருகின்றோம். உங்கள் கண்ணுக்கு முன்னால் சான்றுகள் இருக்கின்றன இனம் அழிக்கப்பட்டதற்கு.

மொழி அழிந்ததன் மூலம் எங்கள் இனம் அழிந்ததற்கு, உங்கள் முன்னால் சான்றுகள் இருக்கின்றன. நீர்கொழும்பிலும், சிலாபத்திலும் நடந்த நிகழ்வுகள் சான்றுகளாக உள்ளன.

வேறு எங்கும் சான்றுகளுக்குப் போகவேண்டாம். சேரன் செங்குட்டுவனின் தேசம். இளங்கோ அடிகளின் நாடு. சிலப்பதிகாரம் தந்தவின் நாடு. அந்தத் தமிழ்நாடு இன்று கேரளம், மலையாளம் என்று சொல்லப்படுகின்றது. அங்கேயிருக்கும் மலையாளிகள் எல்லாம், மலையாளத்தில இருந்துதான் தமிழ் உருவானது. தமிழன் தன்னுடைய எதிரி என்று கருதும் அளவுக்கு அவர்கள் வளர்க்கப்பட்டுள்ளார்கள்.

சேரமான் பெருமான் நாரயனார் காலம் எட்டாம் நூற்றாண்டடையும் ஒன்பதாம் நூற்றாண்டையும் சேர்ந்தது. 742இல் இருந்து 826 வரை சேரமான் பெருமான் நாயனார் வாழ்ந்தார் என்று சொல்லப்படுகின்றது. அவரது கடைசிக் காலத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் அவர் எழுதியது திருவெண்ணத்தந்தாதி. அந்த நூல் தமிழ் நூல் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நூலைத் தந்த அதே தேசம் இன்று மலையாள நாடாக மாறிப்போய்விட்டது. இது பழைய வரலாறு.

இன்று புதிய வரலாறு இருக்கின்றது. இலங்கைத் தீவில் தமிழர்கள் அழிக்கப்பட்ட வரலாறு. தமிழ்நாட்டில் பல்வேறு நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், பிஜித்தீவுகள், மொறிஜியஸ், ஆபிரிக்க போன்ற நாடுகளில் சென்ற தமிழர்கள் இன்று தமிழர்களாக இல்லை. அவர்கள் தமது மொழியை இழந்து வேற்று இனத்தவராக மாறிவிட்டார்கள்.

பத்து லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளில் இன்று தமிழர்களாக வாழ்கிறார்கள். இரண்டு தலைமுறையில் அவர்கள் அழிந்துபோய்விடுவார்கள். அவர்களின் பெற்றோர் இன்று தமிழராக அங்கு இருக்கின்ற காரணத்தால், பிள்ளைகள் அவர்களுடன் தமிழ் பேசுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்குப் பிறக்கும் பிள்ளைகள் தமிழில் பேசவேண்டிய தேவையிருக்காது. ஆகவே வெளிநாடு போன அந்தப் பத்து லட்சம் மக்கள் இன்னமும் இரண்டு தலைமுறையில் - அதாவது ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள் - அந்தச் சமுகம் அங்கு அழிந்து போகும். தமிழர்கள் அழிந்து விடுவார்கள். போதாக்குறைக்கு இங்கு நாங்களும் மொழியை அழித்துக் கொண்டிருக்கின்றோம்; நாள் தோறும் அழித்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது இனத்தின் இருப்பைக் காப்பாற்ற வேண்டிய தேவை எங்களது சமுகத்துக்கு உண்டு.

தமிழ் படிப்பிக்கும் தேர்வில் 56 பேரைத் தெரிவு செய்திருக்கின்றோம். வந்தவர்களி பெரும்பாலானவர்கள் பெண்கள்தான். எங்களது பட்டறவின்படி - ஏற்கனவே சில கற்கை நெறிக்கு ஆள்களைத் தேர்ந்தெடுக்கும் போது எங்களுடன் பணியாற்றுவோம். விட்டு விட்டுப் போக மாட்டோம் என்று கூறுவார்கள்.

பணம் செலவழித்து ஓராண்டு படிப்பித்து முடித்து பணியில் இணைத்து, 2,3 மாதங்களில வருவார்கள் 'வெளிநாட்டில் திருமணம் பேசியிருக்குப் போகப்போகிறேன்' என்பார்கள். ஒன்றுமசெய்ய முடியாத சங்கடமான நிலை. ஆண் என்றால் போக வேண்டாம் என மறிக்கலாம். பெண் பிள்ளையின் வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். அதனால் அவரை விட்டுவிட வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவோம்.

இம்முறை தெளிவாகக் கூறியுள்ளோன். வெளிநாட்டில் உறவினர்கள் இருந்தவர்களை வேலைக்கு எடுக்கவில்லை. 'எமது இனத்தின் உயிரை தமிழைக் காப்பாற்றும் ஒரு பணி இனத்தின் இருப்பைக் காப்பாற்றும் பணி. இதில் உங்களுடன் விளையாட முடியாது' என்று கூறிவிட்டோம்.

இங்கு படிக்கிற ஒவ்வொருவருக்கும் மாதம 5ஆயிரம் ரூபா வழங்கப் போகிறோம். படிக்கிறவர்களுக்கு பணம் கொடுக்கிறோம். செலவு முழுவதும் எங்களுடையது. அவர்களின் குடும்பத்துக்காக 5ஆயிரம் ரூபா வழங்குகின்றோம்.

இப்படியான கட்டுப்பாட்டுடன் செய்கின்றோம். இது தவறான செய்தியாகக் கூட சிலருக்குப் படலாம். வற்புறுத்தி ஆள்களைச் சேர்க்கிறோம் என்று சிலருக்கப் படலாம். கட்டாயமாக வாருங்கள் என வற்புறுத்தவில்லை. இது தான் எங்கள் கட்டுப்பாடு. விரும்பினால் வாருங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

எங்கள் மொழியின், மண்ணின், இனத்தின் விடுதலைக்காக எவ்வளவு எமது விடுதலைப் போர் இன்றியமையாததோ அதேபோன்றுதான் எமது மொழியைக் காப்பதற்கான நடவடிக்கைகளையும் கருதுகின்றோம்.

எவ்வளவு பணம் செலவானாலும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்ற முனைப்போடு செயற்படுகின்றோம்.

ஏனைய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களும் மொழி அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள் என பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். ஆசிரியர்களுக்கெல்லாம் தமிழ் கற்பிற்கின்ற வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றோம். அது படிப்படியாகத் தொடங்கும். ஆசிரியர்கள் முடிந்த அளவு தமிழைப் படிப்பிக்க வேண்டும். மாணவர்கள் மொழிமீது பற்று வைக்க வேண்டும். மொழியை இழந்தால், இன அடையாளத்தை இழந்து விடுவீர்கள். இந்த மண்மீது பற்று வையுங்கள்.

**தொகுப்பு: குகா**

ஒரு காலத்தில் எமது தமிழர்களிடம் இருந்த உணர்வு என்னவென்றால், அரச உத்தியோகம். அதுதான் குறிக்கோள். நான் பொறியியலாளராக வர வேண்டும். மருத்துவராக வரவேண்டும். கணக்காளராக வரவேண்டும். ஆசிரியராக வரவேண்டும் என்றுதான் கூறுவார்கள். இப்போது யாரிடம் கேட்டாலும் வரும் பதில் நான் வெளிநாட்டுக்குப் போக வேண்டும் என்பதாகும்.

ஒருகாலத்தில் தமிழரை வெளிநாட்டவன் அடிமைப்படுத்தி இங்கு வைத்திருந்தான். அவனுக்கு அடிமையாக இங்கே இருந்து பணியாற்றினோம். அவன் போய்விட்டான் அவனுக்குப் பினனால் ஓடிக்கொண்டிருக்கிறோம். அங்குபோய் அவனுக்கு கீழ் அடிமையாக வாழ்வதற்காக. இது தான் இன்றைய நிலை.

எமது மொழியின் இருப்பை உறுதிசெய்ய இணைந்து செயற்படவேண்டிய காலம் இது என்பதை சகலரும் உணரவேண்டும். ★

## இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இப்போதைக்கு இல்லை

கொழும்பு,மார்ச்14

இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடும் நடவடிக்கை இப்போதைக்கு சாத்தியமற்றதொன்றாகவே இருப்பதாக அரசின் நம்பிக்கைக்குரிய உயர்மட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகளைப் பரஸ்பரம் இருதரப்பினரும் முன்னதாக மேற்கொண்டிருந்தபோதிலும், இந்திய அரசு இது தொடர்பில் இறுதித் தீர்மானத்திற்கு வரவில்லையென்று தற்போது தெரிவிக்கப்பட்டதால் இம்முயற்சி இப்போதைக்குச் சரிவராது எனக் கூறப்படுகிறது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்வதில் இந்தியாவின் ஆர்வம் முன்னரைவிடத் தற்போது குறைந்திருப்பது ஆச்சரியத்தைத் தருவதாக அமைந்துள்ளதென்று இலங்கைத் தரப்பில் பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

தற்போதைய அமைதி முயற்சிகளுக்கான சூழ்நிலையில் இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது ஈழத் தமிழர்களுக்குப் பாதகமான செயற்பாடாக அமையுமென்ற சாரப்பட விடுதலைப்புலிகள் புதுடில்லிக்கு ராஜதந்திர ரீதியிலான அழுத்தமொன்றை வழங்கிய தன் பின்னணியிலேயே இந்த ஒப்பந்தம் செய்வதில் தாமதம ஏற்பட்டிருக்கலாமென்று இலங்கை அரசு கருதுவதாகவும் அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ-க)

## வலி.வடக்கில் கிராம சேவையாளர்கள் மேலதிக கடமைகளை இடைநிறுத்தினர்

வலிகாமம்தெற்கு,மார்ச்14

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பல கிராம சேவையாளர்கள் மேலதிக கடமை வேலைகளை மேற்கொள்வதை இடைநிறுத்தியுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி புதன்கிழமையிலிருந்து இவர்கள் தமது மேலதிக பதில் கடமை பணிகளெதையும் மேற்கொள்வதில்லை எனத் தீர்மானித்திருந்தனர்.

தமது மேலதிக பதில்கடமைப் பணிகளுககுரிய வேதனங்கள் எதுவும் வழங்கப்படாமையைக் கண்டித்தே இவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளைத் தமது பிரிவுகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு கிராம சேவையாளர்களுக்கும் ஐந்து, ஆறு கிராம சேவையாளர்கள் பிரிவுகளின் வேலையையும் மேற்கொண்டு வந்ததாகவும் தமது மேலதிக பணிகளுக்கு எதுவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையால் தாம் மேலதிக பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளாது இடைநிறுத்தியுள்ளதாகவும் கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர்.

தமது நிலைப்பாட்டை வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் ஊடாக யாழ்.அரச அதிபருக்கு. அறிவித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (8-152)

## ஜெய்ப்பூர் நிறுவன பயனாளிகளுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்க ஏற்பாடு

கொழும்புத்துறை,மார்ச்14

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தையொட்டி யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் பயனாளிகளுக்கு இலவசமாக முச்சக்கரவண்டிகளை வழங்கவுள்ளது.

சவர்வதேச வலுவிழந்தோர் தினமான நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் பணிமனையில் இந்நிகழ்வு நடைபெறும்.

ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவரும் பணிப்பாளருமாகிய திருமதி தி.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முதற்கட்டமாக 11 பயனாளிகளுக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்படும்.

தனிநபர் நன்கொடைத் திட்டத்தின்கீழ் ஜெய்பபூர் நிறுவனத்தினூடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பயனாளிகளுக்கே இவ்வண்டிகள் வழங்கப்படவுள்ளன என நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-30-202)

## வானொலித்துறை அனுபவ நூலின் வெளியீட்டு விழா கொழும்பில்

கொழும்பு,மார்ச்14

மூத்த ஒலிபரப்பாளரும் தற்பொழுது அமெரிக்காவில் வசிப்பவருமாகிய எஸ்.புண்ணியமூர்த்தியின் 40 ஆண்டுகால வானொலி அனுபவங்களை உள்ளடக்கிய 'செய்திகள் வாசிப்பவர் எஸ்.புண்ணியமூர்த்தி' (The News read by S.Punniamoorthy) எனும் ஆங்கில நூல் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இம்மாதத 19ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படும்.

இலங்கையிலும், இந்தியாவிலும் முன்னணி ஊடகவியலாளராக விளங்கும் பி.கிருஷ்ணசாமி இந்த நூல் எழுதியுள்ளார்.

நூல் வெளியீட்டு வைபவத்திற்கு ஊடகவியலாளர் வீஏ.திருஞானசுந்தரம் தலைமை வகிப்பார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கே.வீரமன் கௌரவ அதிதியாகக் கலந்துகொள்வார்.

இலங்கை இதழியல் கல்லூரி விரிவுரையாளர் ஆ.சிவனேசச்செல்வன், பிரபல விமர்சகர் கே.எஸ்சிவகுமாரன், ஊடகவியலாளரும் கவிஞருமாகிய இளையதம்பி தயானந்தா மற்றும் கவிஞரும் ஒலிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளார்கள். (ஐ)

# பணிநிலை வெற்றிடங்கள்

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் (நெகர்ப்)

வடக்கு – கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் [நெகர்ப்] செலவு சார்பாகச் சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து [IDA] கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சும் வடக்கு – கிழக்கு மாகாணசபையும் இணைந்து கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியும் அனுபவமும் வாய்ந்த பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

### பொதுவான நிபந்தனைகள்

1. இந்தப்பதவிகள் தற்காலிகமானவை. அத்துடன், நியமனங்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலானவை. தேவையையும், செயற்படும் ஆற்றலையும் பொறுத்து ஒப்பந்த காலம் நீடிக்கப்படும்.
2. நியமனம் பெறுவோர் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணப் பிரிவின் திட்டப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணிபுரிவர்.
3. இந்த நியமனத்தைச் சிபாரிசாகப் பயன்படுத்தி அரச அல்லது கூட்டுத்தாபனத்துறைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு எதனையும் பெறுவதற்கு நியமனதாரருக்கு உரிமை இல்லை.
4. தெரிவுசெய்யப்படுவோர் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டத்தில் எந்தப் பகுதியிலாவது சேவையாற்ற வேண்டும்.
5. வயது எல்லை: விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதுக்குக் கீழ்ப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். 55 வயதுக்குக் கீழ்ப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏற்கனவே அரசசேவையில் பணியாற்றுவோருக்கும், அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றோருக்கும் இந்த வயது மேலெல்லை கணிக்கப்படமாட்டாது.
6. ஊதியம்: 26-12-2000 அன்று வெளிவந்த முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல.10இன்படியான பந்தி,4.5 ஆகியவற்றின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகுதியையும் அனுபவத்தையும் பொறுத்து பேசித் தீர்க்கப்படலாம்.
7. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எந்தப்பகுதியிலும் பணிபுரியக்கூடியவாறான சிறந்த ஆரோக்கியத்தையும், உடல் நிலையையும் விண்ணப்பதாரிகள் கொண்டிருக்கவேண்டும்.
8. விண்ணப்பிக்கவேண்டிய முறை: கல்வித்தகைமை, தொழில்சார் தகைமை, பிறந்த திகதி, முன்னர் ஆற்றிய பணியின் விவரம், கடந்த கால அனுபவம் முதலியன அடங்கலாக விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும்படி விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். *திட்டப்பணிப்பாளர், திட்ட முகாமைத்துவப் பிரிவு, வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம் (நெகர்ப்), வடக்கு - கிழக்கு மாகாண சபை செயலகம், உள்துறைமுக வீதி, திருகோணமலை* என்னும் முகவரிக்கு 2005 மார்ச் 28 அன்று அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கும்வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். பதிவுத் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும்பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். ஏற்கனவே பொதுச்சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது பிரிவுகளின் பொறுப்பானவர்களூடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

**01. சமூக அபிவிருத்தி நிபுணர்(1)**
**கடமைகளும் பொறுப்புக்களும்**

இப்பதவி வகிப்பவர் சமூகத்தாக்க மதிப்பீடு, சமூக பாதுகாப்பு இடர், நிறுவனரீதியான அபிவிருத்தி, மனித இயல்பு மேம்பாடு, சமூக முன்னெடுப்பு அபிவிருத்தி ஆகியவற்றிற்குப் பொறுப்பாவார்.

### விசேட முதன்மைப் பணிகள் பின்வருமாறு

1. மாகாண, மாவட்ட மற்றும் கிராமிய மட்டங்களில் ஒன்றுசேர்ந்த சமூக பொருளாதாரத் திட்ட வரைபுகளைத் தயாரித்தல். அத்துடன், தற்போது செயற்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட கிராமிய சமூகத்திட்ட வரைபுகளைப் புதுப்பித்தலுடன், இந்தத் திட்டங்களின் பிரதம பங்காளர்களினால் மேற்கொள்ளப்படும் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளில் மேற்கூறிய நடைமுறைகளுக்கான திருத்தங்களுக்காகச் சிபார்சு செய்தல். எதிர்பார்க்கும் பெறுமதிகளை மதிப்பீடு செய்தலுடன் ஏதேனும் மாற்றங்கள் தேவைப்படின் அதற்கான சிபார்சு செய்தல்.
2. திட்டத் தலையீட்டினால் பல்வேறு உபகுழுக்களுக்கு அல்லது பயனாளிகளுக்கு நிகழவுள்ள நேர்மறையான அல்லது எதிர்மறையான சமூகத் தாக்கங்களை இனம்காணல், தாக்கங்களை மதிப்பீடு செய்து முன்னுரிமை வழங்குவதுடன், எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்குப் பின்பற்றக்கூடிய வழிமுறைகளை முன்வைத்தல்.
3. காணி மற்றும் ஆதன உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை இனங்கண்டு எதிர்மறையான தாக்கங்களைக் குறைக்கும் வழிகளைச் சிபாரிசு செய்தல்.
4. காணி, சொத்துரிமையில் உள்ள பிரச்சினைகளை இனம்காணவும் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கான சிபார்சுகளைச் செய்தல்.
5. திட்டம் எதிர்நோக்கும் உள்ளக, வெளியக பிரதான சமூக இடர்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதலும், சமூகப் பாதுகாப்பு மற்றும் இடர்களை முகாமைசெய்யும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல்.
6. திட்ட அமுலாக்கத்தின்போது மேற்கொள்ளப்படவேண்டிய சமூகத்தாக்க மதிப்பீடுகளை மேற்பார்வை செய்தல்.
7. கிடைக்கக்கூடிய வழிகாட்டல்களுடன் இணங்கிப்போகுமாறு திட்டத்தில் நிகழக்கூடிய சமூகப்பாதுகாப்பு மற்றும் இடர்களைக் கண்காணிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளல்.

### தகைமைகளும் அனுபவங்களும்

1. சமூகவியல் / மானிடவியலை ஒரு பாடமாகக் கொண்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது சமூகவியல் / மானிடவியலை ஒரு பாடமாகக் கொண்ட அபிவிருத்தி பொருளாதாரத்துறையில் பல்கலைக்கழகப் பட்டம்.

அத்துடன்

2. சமூக விஞ்ஞானத்தில் பட்டப்பின்படிப்பு அல்லது பட்டப்பின் டிப்ளோமா நெறியைப் பூர்த்திசெய்திருத்தல். அத்துடன், கிராம அபிவிருத்தியில் நிபுணத்துவ அனுபவமும், எல்லை நிலையிலான நலிவுற்ற உபகுழுவுடன் பணியாற்றிய சமூக மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், சமூகத் திட்டவரைபுகள், நிறுவனப் பகுப்பாய்வு மற்றும் ஒழுங்கமைந்த அபிவிருத்தியில் பணியாற்றிய குறைந்த பட்சம் 10 வருட கால அனுபவமும் கொண்டிருத்தல்.

**02. சுற்றாடல் நிபுணர் முழு நேரம் (01)**
**கடமைகளும் பொறுப்புக்களும்**

இப்பதவி வகிப்பவர் விசேட கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும்.

1. கட்டடம் அமையவுள்ள பகுதியின் சுற்றாடலை மதிப்பீடு செய்து, சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு இலகுபடுத்தும் நடவடிக்கைகளைத் தயார்படுத்தல்.
2. நிர்மாணம் மேற்கொள்ளப்படவுள்ள பகுதிகளுக்குச் சுற்றாடல் தாக்க மதிப்பீடு தயார் செய்தல்.
3. a. வீடுகள் நிர்மாணிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களைத் திரட்டுதல்.
   b. திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்தல்.
   c. கழிவுநீர் முகாமைத்துவம் செய்தல்.
   d. உரிய சுகாதார வசதிகள் வழங்குதல் போன்ற திட்டத்தை அமுல்படுத்தும் பல்வேறு கட்டங்களின்போது சிறந்த சுற்றாடல் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்தல்.
4. திட்ட அமுலாக்கத்தின்போது பொருத்தமான சுட்டிகளைத் தயாரிப்பதுடன், தகுந்த கண்காணித்தல் நடைமுறைகளை அமுல்படுத்தல்.
5. சுற்றாடல் சேதாரங்களை முன்னரே கண்டறியக்கூடிய விதத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளல்.
6. சுற்றாடல் பாதுகாப்புக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளதனை உறுதிசெய்தல்.
7. வீடமைப்பு நிர்மாணத்துடன் தொடர்புடையதான சுற்றாடல் கண்காணிப்பு மற்றும் சுற்றாடல் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றைச் செயற்படுத்துவதிலும், அமுல்படுத்துவதிலும் பங்குதாரர்களுக்கு உதவிசெய்தல்.

### கல்வித்தகைமைகளும் அனுபவமும்

1. விஞ்ஞானம் அல்லது சிவில் / சுற்றாடல் பொறியியல் பட்டதாரி, சுற்றாடல் செயற்றிட்டங்களில் குறைந்தது 8 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்டிருத்தல்.

அத்துடன்

2. சுற்றாடல்துறையில் பட்டப்பின்படிப்பு அல்லது பட்டப்பின் டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

**03 பிரதித் திட்டப்பணிப்பாளர் பதவி (முழுநேரம்)09**
**கடமைகளும் பொறுப்புகளும்**

1. மாவட்டத் திட்டப் பிரிவினையும், திட்ட அலுவலர்களின் செய்றிறன் மதிப்பீடு, நடவடிக்கைகளை மேற்பார்வையிடல், ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் செயற்திறனுடன் முகாமைத்துவம் செய்தல்.
2. திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் தொடர்பான முறமைகளையும் நடைமுறைகளையும் வகுப்பதுடன், வினைத்திறனுடன் ஒழுங்கமைத்தல், திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், நடைமுறைப்படுத்தல்.
3. திட்டமிடல், நடைமுறைப்படுத்துகையின்போது எழும் பிரச்சினைகளை இணங்காணல், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டு நிதியிட்ட முகவர்களுடனும், ஏனைய பங்காளர்களுடனும் சுமுகமான தொடர்பினை உருவாக்குதலும் பேணுதலும்.
5. திட்டப்பணிப்பாளரின் கோரிக்கைக்கு ஏற்றவகையிலே அறிக்கைகளையும், ஏனைய விவரங்களையும் தயாரித்தல்.

### கல்வித் தகைமையும் அனுபவமும்

1. பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகவியல், விவசாயம், வணிக முகாமைத்துவம் / முகாமைத்துவம் / கணக்கியல் அல்லது வேறேதும் பொருத்தமான துறைகளில் இளமாணிப்பட்டம் அத்துடன், வெளிநாட்டு முகவர்களினால் நிதியீட்டம் செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 12 வருட கால அனுபவம். இதில் 8 வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளராக இருத்தல்.

அல்லது

2. தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி/டிப்ளோமா) அல்லது குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றின் கூட்டிணைப்பு அங்கத்துவம் .

அத்துடன்

அத்துறையில் 8 வருட அனுபவம் கொண்டிருத்தல். இதில் வெளிநாட்டு முகவர்களினால் நிதியீட்டம் செய்யப்படும் அபிவிருத்தித் திட்ட நடைமுறைப்படுத்தலில் 5வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

### தொழில்சார் தகைமை

1. சிக்கலானதும் பல்வேறு செயற்பாடுகள் கொண்டதுமான திட்டங்களைத் திட்டமிடலும் நடைமுறைப்படுத்தும் ஆற்றல்.
2. திட்டத்தின் நீண்டகால நிலைவேறுடைமையை உறுதிப்படுத்தும் வகையிலே பங்காளர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் திறமைசார் நடைமுறைப்படுத்தும் ஆற்றல்.
3. பல்வகை முகாமைத்துவம் கொண்ட குழுவினை ஆற்றலுடன் ஒழுங்கமைத்தல், அதற்குத் தலைமை தாங்குதல்.
4. திட்டத் தரவுகளை ஆராயும் ஆற்றலும், திட்ட நடைமுறைப்படுத்தலின்போது உருவாகும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறனும்.

**04 சிவில் பொறியியலாளர் (8) (முழுநேரம்)**
**கடமைகளும் பொறுப்புகளும்**

இப்பதவி வகிப்பவர் சிறப்புத் தேர்ச்சி தேவைப்படுமிடத்து தேவையான தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குவதுடன், திட்ட அமுலாக்கல் வரைபிலும், கடன் / நன்கொடை உடன்படிக்கையிலும் விவரப்படுத்தப்பட்டுள்ளதன்படி திட்டத்தயாரிப்பு, திட்ட அமுலாக்கம் போன்ற சகல விடயங்களையும் கையாளவேண்டும்.

1. புனரமைப்புத் திட்டங்களுக்கென்று சிபார்சு செய்யப்பட்ட அல்லது அத்திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வகைப்பட்ட குறைந்த செலவுடைய வீடமைப்புத் திட்டங்கள் சார்ந்த தகவல்கள் சேகரித்தல்.
2. திட்டப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீடுகள் புனர்நிர்மாணத்திற்குப் பொருத்தமான வீடமைப்பு வகைகளைத் திட்டமிட்டு வடிவமைத்தல்.
3. வேலைத்தளத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கு உதவி வழங்கி மேற்பார்வை செய்தல்.
4. நிர்மாணத்தின் அளவு எவ்வளவு முன்னேற்றமடைகிறது என்பதைக் கண்காணித்தல்.
5. திட்ட அமுலாக்கத்தின்போது எழும் பிரச்சினைகளை உடனடியாக இனங்கண்டு அவற்றுக்கு உடனடித்தீர்வு காணுதல்.

(தொடர்ச்சி 10 ஆம் பக்கத்தில்)

# பணிநிலை வெற்றிடங்கள்

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் (நெகர்ப்)

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

6. திட்டத்துக்கான கொள்வனவுகளை மேற்கொள்வதில் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துக்கும் அரசாங்கத்தின் வழிமுறைகளுக்கும் இணங்கிப்போகக்கூடியவாறு திட்டப் பணிப்பாளருக்கு உதவி செய்தல்.

**தகைமைகளும் அனுபவங்களும்**

1. பொறியியலில் இளமாணிப்பட்டம் அல்லது
2. பொதுநிர்வாக அமைச்சின் பொறியியல் சேவைகள் சபையினால் சமமானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறெதும் தொழில்நுட்பத் தகைமையுடன் குறைந்த செலவிலான வீடுகளை நிர்மாணித்தல், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கீழ் செயற்படும் அபிவிருத்தித் திட்டத்தில் சேவையாற்றிய 2 வருட கால அனுபவம். அல்லது
3. இலங்கை தொழில்நுட்பசேவையுடன் அரச/மாகாணசபை அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் 10 வருட கால அனுபவம்.

**05.காணி நிர்ணய உத்தியோகத்தர் (முழுநேரம்) 01**

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இளமாணிப்பட்டம் பெற்று, காணி விடயம், காணி உரிமம், கிராமக் குடியேற்றம் சம்பந்தமாகக் காணி உரிமம் பாராதீனப்படுத்தல், கிராமக் குடியேற்றம், காணிப்பிணக்குகளைத் தீர்த்துவைத்தலில் 5 வருட அனுபவத்துடன் போதிய அறிவிருத்தல். **அல்லது**
2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விவசாயத்தில் அல்லது Real Estate இல் டிப்ளோமா நெறியைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது அரச / தனியார் துறையில் அரச காணிகள், தனியார் காணிக் குடியேற்றம் சம்பந்தமாக ஆகக்குறைந்த 15 வருட அனுபவம் பெற்றிருத்தல். புதிய கிராமிய குடியேற்றத்திட்டங்கள் அமைத்தலினும், குடியேற்றத்திட்டங்களுக்கான அபிவிருத்தித் திட்டம் அமைத்தலிலும் பரந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

3. ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பதிவாளர்நாயகத் திணைக்களப் பதிவாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்.
4. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல். –
5 நாட்டின் காணிச் சட்டங்கள் , நடைமுறையிலுள்ள சட்டங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

**6 கணக்காளர் பதவி முழுநேரம் (08)**

பதவியிலமர்த்தப்படும் உத்தியோகத்தர் கணக்கியல் முறைமை, உள்ளகக் கட்டுப்பாடு, வரவு - செலவுத் திட்டமிடல், நிதி அறிக்கையிடல் உள்ளிட்ட நிதி முகாமைத்துவ முறைமைகளை உருவாக்குவதுடன், அவற்றுக்குப் பொறுப்பானவராகவும், கணக்காய்வு விடயங்களில் ஆற்றலுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். விசேடமாக அவர்-

1. திட்டத்தின்பால் உள்ள வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கேற்றவகையில் திறமையான நிதி நடவடிக்கைகளையும் முறைமைகளையும் உருவாக்குதல்.
2. திட்டநடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கும் கண்காணிப்புச் செய்வதற்கு மேற்ற வகையிலே சரியானதும் பூரணமானதும் உரிய நேரத்தில் கிடைக்கக்கூடிய நிதித் தகவல்களை வழங்கக்கூடியவராகவும் இருத்தல்.
3. திட்டத்தின் வருடாந்த வரவு - செலவு மதிப்பீடு கொள்வனவும் திட்ட வரைவு ஆகியவற்றைத் தயாரித்தல்.
4. கணக்குப் பொறுப்பீட்டினை உறுத்திப்படுத்தல், அரசாங்கத்தினதும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் நடைமுறைகளுக்கு ஏற்றவகையிலும் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதிவளத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துதல்.
4. திட்டச் செலவீனங்களுக்காகக் கடனாகப் பெற்ற நிதியினை உரிய நேரத்தில் மீளப்பெறல், செலுத்துதல், மீளக் கொடுத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்தல்.
5. மாதாந்த, காலாண்டு, வருடாந்த நிதிக் கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்தல். கணக்காய்வுத் தேவைகளுடன் இணங்குதல்.
6. கடன் பெறு திட்டங்களின் மீளச் செலுத்துதல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரச முகவர் நிறுவனங்களுடன் நெருங்கிய உறவினை உருவாக்குதல்.

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. கணக்காளர் சேவையின் முதலாம் தர உத்தியோகத்தர் வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் நிதி முகாமைத்துவத்தில் 10 வருட அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது அல்லது
2. நிதி அல்லது முகாமை நிதியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இணை அங்கத்துவம் ( CIMA/ACCA/ICASL ) அத்துடன், வெளிநாட்டு நிதியீட்டு அபிவிருத்தித் திட்டத்தில் குறைந்தது 5 வருடகால அனுபவம் **அல்லது**
3. அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அமைப்பு ஒன்றினால் நடத்தப்பட்ட இடைநிலைத் தரத்திலான தொழில்சார் பரீட்சையில் சித்தியும் வெளிநாட்டு நிதியீட்டத் திட்டமொன்றில் 15 வருட அனுபவமும்
4. கேள்வி முன்மொழிவுக்கான மதிப்பீடு செய்யக்கூடிய வகையிலான பகுப்பாய்வுத் திறன்.
5. நல்ல தொடர்பாடலும் (எழுத்து.பேச்சு) அலுவலர்களிடையே உறவுகளைப் பேணலும்.
6. பொருள் சேவைகள் கொள்ளல் தொடர்பில் வளம் பொருந்தியதும் கடும் உழைப்பும் நிலையான தன்மையுடன் கூடியதுமான அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆற்றல்.
7. கணனித்துறை சார் அறிவு.
8. ஆங்கில மொழியில் எழுதுவதிலும் பேசுவதிலும் அதி உயர்ந்த வினைத்திறன்.

**திட்ட உதவி அலுவலர்கள்**

**07. உதவிக் கணக்காளர் பதவி (01) (முழுநேரம்)**

**கல்வித் தகைமையும் அனுபவமும்**

1. க.பொ.த.(உ.த)பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் சித்தி (மூன்று அல்லது நான்கு பாடங்கள் எது பொருத்தமானதோ) அத்துடன்
2. க.பொ.த(சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி ஆங்கிலம் உட்பட கணிதம், மொழி, இலக்கியம் ஆகியவற்றுடன் வேறு 02 பாடங்களில் சித்தி அத்துடன்
3. அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நிறுவனம் ஒன்றில் தொழில்சார் பரீட்சையில் பகுதித் தகைமை.
4. தனியார் அல்லது பொது நிறுவனம் ஒன்றில் (வங்கிச் சூழல் விரும்பத்தக்கது) ஒரு வருடகால அனுபவம்.
5. கணனி மென்பொருள் அல்லது அதுபோன்ற சந்தையிலுள்ள மென்பொருள் முறைமை ஒன்றினைக் கையாளக்கூடிய சிறந்த அறிவு .

**08. திட்டச் செயலாளர் பதவி(01) (முழு நேரம்)**

பதவியிலமர்த்தப்படும் உத்தியோகத்தர் அலுவலக நடைமுறை தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவுவதுடன், திட்டப்பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோருக்கு உதவுவதும் திட்ட அலுவலகம் செயற்றிறனுடன் இயங்க உதவுதல்.

**கல்வித் தகைமையும் அனுபவமும்**

1. க.பொ.த(உ.த) இல் எல்லாப் பாடங்களிலும் (மூன்று அல்லது நான்கு பாடம் எது பொருத்தமானதோ) சித்தி. அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் அலுவலக செய்ற்பாடு தொடர்பான கற்கைத்துறை அல்லது 5 வருட அனுபவத்துடன் சாட்டட் செயலாளர் பரீட்சைக்குத் தயார்படுத்தல் **அல்லது**
2. சாட்டட் செயலாளராக இருத்தல்

**தொழில்சார் திறன்**

1. ஆங்கிலத்திலும் கணனித்துறையிலும் அதிசிறந்த ஆற்றல்.
2. சிறந்த தொடர்பாடல்திறன் (எழுத்து பேச்சு) அத்துடன் சுயேச்சையாக கடிதத்தொடர்பை ஏற்படுத்தும் திறன்.
3. அலுவலக முறைமைகளைக் கோப்பிடுதல், கடிதத்தொடர்பு, அலுவலக ஊழியர்கள் நிலைப்பாடு, அலுவலக நடைமுறைகளை உருவாக்குதலும், பராமரித்தலும்,
4. கணனி இதர அலுவலக கருவிகள் தொடர்பான ஒப்பந்த நடவடிக்கைகளைப் பேணலும் அவற்றைப் பராமரித்தலும்.
5. குழுவாகச் செயற்படும் சூழலிலே ஏனைய குழு உறுப்பினர் மத்தியில் நம்பிக்கை, ஒத்துழைப்பு, சிறந்த பொதுமக்கள் தொடர்பினை ஊக்குவிக்கும் ஆற்றல்.
6. வேலைப்பழுவின் மத்தியில் தொழிற்பட்டு காலக்கெடு எல்லையுடன் செயற்படு திறன்.
7. கணனித்துறையிலும் சுருக்கெழுத்திலும் ஆற்றல்.

**09. சமூகசேவை உத்தியோகத்தர் (08) (முழுநேரம்)**

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. சமூகவிஞ்ஞானம், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகவியல், விவசாயமும், தொழில் நிர்வாகம் / முகாமைத்துவம், கணக்கியல் ஆகிய துறைகளில் ஒன்றில் இளமாணிப்பட்டமும் அரச / அரசசார்பற்ற நிறுவனங்களில் சமூக அபிவிருத்தித் துறையில் குறைந்தது03 வருட அனுபவம்.
2. ஆங்கில மொழியில் சிறந்த ஆற்றலும் கணனியில் தொழிலாற்றும் அறிவும்.

**10.அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி (02) (முழுநேரம்)**

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. அபிவிருத்திக்கல்வி பொருளியல், சமூகவிஞ்ஞானம், முகாமைத்துவம், அரச அறிவியல் அல்லது புவியியல் பாடத்தில் இளமாணிப்பட்டம்.
2. பொதுத்துறை அல்லது தனியார் துறையில் அபிவிருத்தித் திட்டமிடல், நடைமுறைப் படுத்தலில் குறைந்தது 7 வருட கால சேவை அனுபவம்.
3. கணனித்துறையில் சிறந்த ஆற்றல்.

**11 நிர்வாக உத்தியோகத்தர் (01)(முழுநேரம்)**

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. பொது எழுதுநர் சேவையில் அதிசிறப்புத்தரத்துடன் அத்தரத்தில் குறைந்தது 08 வருட அனுபவம் **அல்லது**
2. பொது எழுதுநர் சேவை வகுப்பு 1 இல் அத்தரத்தில் 15 வருடகால அனுபவம் **அத்துடன்**
3. அரச நிறுவனம் ஒன்றில் தாபன வேலைகளில் குறைந்தது 03 வருட அனுபவம் **அல்லது**
4. க.பொ.த.(சா.த) இல் இரண்டு தடவைகளில் மேற்படாது 6 பாடங்களில் சித்தி. இவற்றில் கணிதம், ஆங்கிலம், மொழி / இலக்கியம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியும், வேறும் இரண்டு பாடங்களில் சித்தி
5. ஆங்கில மொழியில் ஆற்றலும், கணனியில் பணி செய்யும் ஆற்றலும்.

**12 பிரதம எழுதுவினைஞர் பதவி(01) (முழுநேரம்)**

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. பொது எழுதுவினைஞர் சேவை வகுப்பு 1 இல் 15 வருட அனுபவம் **அல்லது**
2. க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி. இவற்றில் ஆங்கிலத்துடன் கணிதம், மொழி / இலக்கியம் உட்பட வேறும் இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி
3. ஆங்கில மொழியில் சிறந்த ஆற்றலும், கணனியில் பணிசெய்யும் ஆற்றலும்

**13 தரவு பதியுநர் தட்டெழுத்தாளர் எழுதுவினைஞர் (06) (முழுநேரம்)**

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. (க.பொ.த.உ.த) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (மூன்று அல்லது நான்கு பாடங்களில் எது பொருத்தமானதோ) சித்தி.
2. க.பொ.த(சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6பாடங்களில் சித்தி இவற்றில் கணிதம், ஆங்கிலம், மொழி / இலக்கியம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி. தரவு பதியுநர் பதவிக்கு கணனி தொழிலில் மூன்றுவருட அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன்,
3. பல்கலைக்கழகத்தில் அல்லது வேறேதும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணனியில் பின்வரும் துறைசார் கற்கை நெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்தவராக இருத்தல்
   - ★ எம்.எஸ்.ஆபிஸ்
   - ★ பவர் பொயின்ற்
   - ★ டேற்றா பேஸ் மனேஜ்மன்ற்
   - ★ வெப் டிசைனிங்
4. எழுதுவினைஞர் / தட்டெழுத்தாளர் பதவிகளைப் பொறுத்தவரையில் அத்துறைகளில் மூன்றுவருட அனுபவமுடையோருக்கும் கணனித்துறையில் செயற்படும் ஆற்றல் உள்ளோருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**14. சாரதிகள் பதவி(10) (முழுநேரம்)**

திருகோணமலையில் 03 பதவிகள், வடக்கு - கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதவி.

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. 8 ஆம் வகுப்பில் சித்தி அத்துடன் பாரமான / பாரமற்ற ஊர்திகளைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் அத்துடன்,
2. ஒழுங்கான பணியில் குறைந்தது 3 வருட சாரதி அனுபவம்
3. இராண்டாம், மூன்றாம் மொழிகளில் பேசவும் எழுதவும் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**15. அலுவலக உதவியாளர் பதவி(10)**

திருகோணமலையில் 3 பதவி, வடக்கு - கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதவி

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. 8 ஆம் வகுப்பில் சித்தி
2. அலுவலகப் பணிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டங்களில் முன்னிரிமை வழங்கப்படும்.

**செ.பத்மநாதன், திட்டப்பணிப்பாளர்,**
**வடக்கு -கிழக்கு வீடமைப்பு, புனர்நிர்மாணத்திட்டம்.**

(முற்றும்) (சி-41451)(38-18-14-17-11-12-15-46)

# புலமைப்பரீட்சை சித்தியடையும் மண்டைதீவு மாணவருக்கு பத்தாயிரம் ரூபா நிதியினை இந்துமாமன்றம் வழங்கும்

மண்டைதீவு,மார்ச்14

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் இருந்து, இந்தவருடம் நடைபெறவுள்ள புலமைப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தலா 10ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்க வட இலங்கை இந்துமாமன்றம் தயாராக இருப்பதாக அந்த மன்றத்தின் தலைவர் சு.குணராசா தெரிவித்துள்ளார்.

மண்டைதீவு மகாவித்தியாலத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் அதிபர் சு.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

அந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார் அவர் மேலும் கூறியதாவது:-

"வறுமை, குடும்பங்களின் ஏழ்மை நிலை காரணமாகக் குடாநாட்டின் பல பகுதிகளில் உள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாதவர்களாக உள்ளனர். இவர்கள் கல்வியை தொடர்ந்து கற்பதற்கு உதவுவதற்கு இந்து மாமன்றம் முன்வந்துள்ளது. இவ்வாறு பதினாறு பாடசாலைகளின் மாணவருக்கு உதவி வருகிறது.

நிதிப் பற்றாக்குறை மன்றத்திற்கு பாரிய பிரச்சினையாக உள்ளது. இருந்த போதும் பொது மக்கள் சேர்ந்து வழங்கிய நிதியில் இருந்து பார்வைக்குறைபாடு உள்ள மாணவர்களுக்கு 65ஆயிரம் ரூபா பெறுமதியில் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பாடசாலை மாணவர்களுக்குத் தலா 300ரூபா பெறுமதியான எழுது பொருள்களை இந்தவருடம் வழங்கியுள்ளோம்.

இந்தப் பாடசாலையில் உள்ள சகல மாணவருக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. இதற்கு இரண்டு லட்சம் ரூபா தேவைப்படுகின்றது. மண்கும்பான் அதிபரும் உதவி கோரியுள்ளார். அந்தமாணவர்களுக்கு எம்மாலான உதவிகளை வழங்குவோம்.

பணம் படைத்தவர்கள் பெரிய மனதுடன் வழங்கும் நிதியை மன்றம் விருப்புடன் வரவேற்கும்.

மாணவர்களிடையே சமய உணர்வு இருநத போதும் சமய ஆசாரம் குறைவாகவே உள்ளது.

இவர்களுக்கு சமய பாடப் பரீட்சைகளும், சமய தீட்சையும் வழங்கவேண்டியது கட்டாயமானதாகும்.

அரச நிறுவனங்கள் உயர்கல்வி மையங்கள் தீவுப்பகுதியில் நிறுவப்படவேண்டும். அப்பொழுதுதான் வசதி வாய்புகளைப் பெருக்க முடியும். கல்வி வளரும். மக்களும் திரும்பி வருவர். யாழ். நகரப்பகுதியில் உள்ள நெருக்கடியும் குறையும் - என்றார்.

பிரதம விரந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயப் பிரதிகல்விப்பணிப்பாளர் வ. இராதாகிருஷ்ணன் பேசும் போது கூறியதாவது:-

இந்தப் பாடசாலை பல இடர்களுக்கு மத்தியில், மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலையில் அப்போது இருந்த அதிபருக்குத் திணைக்களம் பதவி உயர்வு வழங்கத் தயாராக இருந்தது.

எங்கள் பாடசாலை மூடப்படக்கூடாது என்பதற்காக அவரால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இங்குவந்து திரும்புவதே மிகச் சிரமமாக இருந்தகாலம் அது.

தற்பொழுது மாற்றம் ஏற்பட்டுள்ளது. 120 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஏ-9பாதை திறக்கப்பட்டபொழுது 162 மாணவர்களுக்கு மேல் இங்குவந்தனர். முன்பு போல் தற்பொழுதும் இது உயர்பாதுகாப்பு வலயத்திலேயே உள்ளது.

ஆனால், பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்ச்சி காணப்படுவது நல்லதே. ஓய்வு பெற்றவருக்குப் பதிலாகப் புதியவரை நியமித்துள்ளோம். இந்தப் பாடசாலைக்கு அண்மையில் மறைந்த வலயக் கல்விப் பணிப்பாளர் வேணுகாபால வாணிதாசனின் காலத்தில் 3 ஆசிரியர்களும், றோ.க.பாடசாலைக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டு இருந்தனர். இந்தப்பகுதியில் இருந்து மாணவர் வெளியேறக்கூடாதென்பதற்காக தற்பொழுதும் ஆசிரியர்களை நியமித்துள்ளோம்.

எழுவைதீவில் ஒரு பாடசாலையை மூடவேண்டிய நிலை ஏற்பட்டு இருந்தது. அந்த நேரத்தில் கல்வியியல் கல்லூரியில் பயிற்சிபெற்ற ஆசிரியரை அங்கு நியமித்தோம். அதன்பின் மாணவர்தொகை பல மடங்கால் அதிகரித்துள்ளது. அது அவரது தனிப்பட்ட அர்ப்பணிப்பால் ஏற்பட்ட மாற்றமாகும் ஆசிரியர்கள் நினைத்தால் ஆகாதது ஒன்றுமில்லை" என்றார் அவர். (ப-88-204)

# ஒழுக்கத்துடன் தேசிய உணர்வையும் விளையாட்டுப்போட்டிகள் வளர்க்கவேண்டும்

## யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி கருத்து

விளையாட்டுப்போட்டிகள் மாணவர்களிடையே ஒழுக்கத்தையும், தேசிய உணர்வையும் வளர்ப்பதாக அமையவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணக் கோட்டம் கல்வி அலுவலக அதிகாரி எஸ்.தங்கராஜா.

யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஒரு நாட்டின் ஒற்றுமையையும் தேசியத்தையும் கட்டியெழுப்பும் வகையில் மெய்வல்லுநர் போட்டிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எமது இளைஞர்களும், யுவதிகளும் வலிமையானவர்கள். தேசநிர்மாணத்தை பேணக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள். இன்று சர்வதேசமே வியக்கும் வகையில் எமது தேசம் எழுச்சி பெற்றமைக்கு அவர்களின் வீரமே காரணம்.

எமது பிரதேசத்தில் பாண்ட் வாத்தியங்கள் இசைக்கப்படும்போது இன்றும்கூட மேலைத்தேச இசையே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. சிலர் இந்திய இசைப்பாடல்களை பயன்படுத்துகின்றனர். இது தடுக்கப்படுதல் வேண்டும். எமது சுதந்திர விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று எத்தனையோ பாடல்கள் எழுச்சி பெற்றுள்ளன. அவை அனைத்தும் மிகுந்த உணர்ச்சி பூர்வமானவை. அவற்றில் துள்ளல் இசை, சோகம், உற்சாகம் எனப் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மைகள் உள்ளன. இவற்றை நாம் இனிவருங்காலங்களில் பயன்படுத்த வேண்டும். அது எமது தேசியத்திற்கு வலுச் சேர்க்கும்.

பாடசாலைகளில் நடத்தப்படும் நிகழ்வுகளில் மாணவர்கள் பயன்படுத்தும் ஆடைகள் அவர்கள் தொடர்ந்தும் பயன்படுத்தத்தக்கதாக இருந்தல் வேண்டும். இல்லமெய்வன்மைப் போட்டிகளின் போது இடைவேளை நிகழ்விற்குப் பயன்படும் பெரும்பாலான உடைகள் அந்த நிகழ்விற்கு மட்டும் பாவித்ததாக இருப்பதால் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்துவிட்டும் அவற்றைப் பாவிக்கமுடியாத நிலை தோன்றியுள்ளது. இது ஏழைமாணவர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் மன உளைச்சலையும் சில சந்தர்ப்பங்களில் அத்தகைய நிகழ்வுகளில் ஏழை மாணவர்கள் பங்கு கொள்ளாமல் ஒதுங்குவதற்கும் வழிசெய்கின்றது - என்றார்.




# ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சரித்திரம் கூறுகின்ற ஆவணம்

## 110ஆவது ஆண்டு மலர் வெளியீட்டில் மதிப்பீடு

எதையும் அடிக்கடி கண்ணாலே பார்த்துக் கொள்ளாதுவிடின் அவைபற்றிய நினைப்பு நமது ஞாபகத்தில் இருந்து அகன்று போய் விடும. அதேபோல எமது பழையகால பாவனைகளையெல்லாம் எழுத்திலே வடித்து ஆவணப்படுத்தாவிட்டால் அவற்றையும் நாம் மறந்து விடுகிறோம். கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவந்திருக்கும் இம்மலர் ஸ்கந்தாவின் சரித்திரத்தை ஞாபகப்படுத்தும் ஒரு ஆவணமாகும்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு சிறப்புமலரை வெளியிட்டுவைத்து உரையாற்றிய ஈழத்தின் மூத்த எழுத்தாளரான சி.சிவசரவணபவன் (சிற்பி) மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் மலர் வெளியீடு ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்கந்தா பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஆ.சி.கணேசவேல் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சி.சிவசரவணபவன் (சிற்பி) தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

எவற்றைப் பற்றிய உண்மைகளும், வரலாறுகளும் எழுத்துருவில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் நடந்த உண்மைகள் மறக்கடிக்கப்பட்டு அவை எல்லாம் பொய் என்ற நிலை ஏற்படக்கூடும். 110 வருடங்களாக இக்கல்லூரி சாதித்த சாதனைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கூறும் ஆவணப் பொக்கிஷமாக இந்த நூல் அமைகின்றது. மனிதர்கள், நன்றி என்று ஒப்பாதாரத்துக்குக் கூறி மற்றவர்கள் செய்யும் செயல்களை மறந்துவிடக் கூடாது. வைத்தியகலாநிதி எஸ்.சுப்பிரமணியம் செய்த சேவைகளை நன்றி என்று மட்டும் கூறி மறந்து விடாமல் மாணவர்கள் அவரை எந்த நாளும் நினைவுகூரும் வகையில் அவரது சிலையை கல்லூரி வளாகத்தின் முன் அமைத்திருப்பதும் ஓர் ஆவணப்படுத்தும் முயற்சியே - எனக் கூறினார்.

ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் -

ஒழுக்கத்தையும் பண்பையும் பேணுகின்ற இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் ஒவ்வொரு துறைகளில் இன்று தலை நிமிர்ந்து வாழ்கின்றனர். இந்த மண்ணின் வேண்டுதலுக்குரிய பணிகளாகவே அவர்களின் செயற்பாடுகள் உள்ளன. தொடர்ந்தும் இக்கல்லூரி ஒழுக்கத்தையும் பண்பையும் பேணி அறிவுசார் சமூகத்தை உருவாக்கவேண்டும். ஞானத்தோடு கூடிய கல்வியைப் பெறுவதற்காகவே சமயத்தின் பெயர்களைக் கொண்டு பாடசாலைகளை உருவாக்கினார்கள். இன்று அப்பெயர்களை மாற்றி, நவீன பெயர்களைச் சூட்டுகின்றார்கள். இதனால், அறிவு வளர்ந்திருக்கின்றதே தவிர ஆத்மீகம் குறைவடைந்து விட்டது. சமயம் சாராத கல்வியினால் மாணவர் மனதில் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன.

ஸ்கந்தா என்ற பெயர் சமயத்தோடு இணைந்த கல்வியை வழங்கிக்கொண்டிருப்பதால், இங்குள்ள மாணவர் மனதில் சலனங்கள் இல்லை. கல்விப் பாரம்பாரியத்தைப் போற்றி வளர்க்கும் ஸ்கந்தா தொடர்ந்தும் ஒழுக்கம், பக்தி, வழிபாட்டுச் செயற்பாடுகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கித்தரவேண்டும் - எனக் கூறினார்.

உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் பேசுகையில் -

இடம்பெயர்வின்பின் 532 மாணவர்களுடன் ஆரம்பமான இக்கல்லூரி, இன்று 1300இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளது. இக்கல்லூரியின் அடிப்படைத்தேவை எது என்பதை உணர்ந்து சகலரும் சேர்ந்து எடுத்த முயற்சிதான் இன்றைய மலர் வெளியீடு. அதிபர் சிவாஜி பதவியேற்றபின் 151 மாணவர் ஏழு ஆண்டுகளில் - பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். 34 மாணவர் தேசிய கல்வியியற் கல்லூரியில் இணைந்து ஆசிரியர்களாகியுள் ளனர். தனது பழைய பெருமைவாய்ந்த புகழை ஸ்கந்தா மீண்டும நிலைநாட்டி வளர்ந்து வரு கின்றது - என்றார்.

பிரதி அதிபர் இ.ஜோர்ஜ், உப அதிபர் சி.மகேந்திரன், உடுவில் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் உட்படப் பலர் இவ்வெளியீட்டுவிழாவில் உரையாற்றினர்.

நூலின் முதற்பிரதியை இலங்கை உப்புக் கூட்டுத்தாபன முன்னாள் முகாமையாளர் ச.ஸ்ரீராமநாதன் பெற்றுக்கொண்டார். (ப-152)

# மாணவர் வளர்ச்சிக்கு பெற்றோரும் அதிக ஊக்கம் தருவது அவசியம்

கைதடி,மார்ச்14



எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் மாணவர்களின் இன்றைய வாழ்க்கைக்கு ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் கூடுதலாக ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கவேண்டும். இதன்மூலம் அம்மாணவர்கள் வாழலாம்; வளரலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு.எஸ்.ஞானலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும்போது என்.ரவிராஜ் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று இப்பாடசாலை விளையாட்டு விழாவிலே மாணவர்களின் ஒழுக்கத்தையும் விவேகத்தையும் பார்க்கும்போது நான் சந்தோசமும் பெருமையும் அடைகின்றேன். இதன் இப்பாடசாலை கடமையுணர்வும், திறமையுமிக்க ஆசிரியர்களைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில், இந்த ஆண்டு இப்பாடசாலைக்கு ஒரு றோணியோ இயந்திரமும் அன்பளிப்புச் செய்வதோடு, பாடசாலை பெயர் பொறிக்கப்பட்ட முகப்பு வளைவையும் செய்துதர இருக்கின்றேன். அத்தோடு, இனிவரும் காலங்களிலும் இப்பாடசாலைக்கு என்னாலான உதவிகளை நான் செய்வேன். இன்று இக்கிராமத்தின் வளர்ச்சிக்காக என்னாலான உதவிகளை நான் செய்துவருகின்றேன். இது இனிவரும் காலங்களிலும் தொடரும் - என்றார்.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கூல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சத்தியநாதன், கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (75-204)

# தமிழினத்தை எந்தச்சக்தியாலும் ஒருபோதும் அழித்துவிட முடியாது

## எச்சத்திலும் உயிர்த்தெழுவோம் என்கிறார் இளம்பரிதி

வரணி,மார்ச்14



தமிழினத்தை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது. எச்சத்திலும் உயிர்த்தெழும் இனம் எம்இனம், எம் போராட்டத்திற்கும் வலுச் சேர்த்தவர்கள் எம்மக்கள் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கல்விதான் ஒருவனுக்கு வாழ்க்கையின் பாலமாக அமைந்துள்ளது. கல்வியை முறையாகக் கற்பதன்மூலம் தான் தனது எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளமுடியும். கல்விதான் எமது போராட்ட நிலைகளை வலுப்படுத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. எமது தலைவரின் சாணக்கியத்தினால் சர்வதேச ரீதியில் எமது இயக்கம் பிரபலம் அடைந்துள்ளது. இதை எவரும் மறக்கமுடியாது. எம்மை எச்சத்தினாலும் அழிக்கவோ ஒடுக்கவோ முடியாது. இந்தியன் அமைதி காக்கும் படை எமது மண்ணை ஆக்கிரமித்த காலத்தில் வரணிப் பிரதேசந்தான் எமக்கு சகல விதத்திலும் பாதுகாப்புத்தந்து உதவியது. மக்கள் படையினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் எமக்கு உறைவிடம், உணவு, பாதுகாப்பு தந்து எம்மை உபசரித்தமையை நாம் என்றென்றும் மறக்கமாட்டோம். இங்கு இருந்துதான் நாம் அப்படைகளுக்கு எதிரான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். சர்வதேச சமூகமும் எமக்கு மதிப்பளித்து இங்கு வந்து எமது தலைமையுடன் பேச்சை நடத்திச் செல்கின்றது. இது யதார்த்தமான உண்மை - என்றார்.

இவ்விழாவில் தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, தியாகி அறக்கொடை நிர்வாகி, வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் மற்றும் பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி த.பரமானந்தர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜும் கலந்துகொண்டு உரையாற்றினார்.(ப-170-204)

# வடக்கில் புலிகளின்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிமாவட்ட வீரர்கள் பலர் இப்போது கொழும்பில் கழகங்களில் இணைந்து விளையாடுகிறார்கள். அதேபோல யாழ். வீரர்களும் கழகங்களில் இணைந்து விளையாடினால், 'ஏ' அணிக்குத் தெரிவாகும் சந்தர்ப்பம் ஏற்படும்.

❑ *கேள்வி:* கொழும்பு வரும் வீரர்களுக்கு வசதிகள் வழங்குவீர்களா?

✪ *பதில்:* தேவையான உதவிகளை வழங்குவோம். இருப்பிட வசதி உட்படச் சகல வசதிகளையும் செய்துகொடுப்போம்.

❑ *கேள்வி:* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன உதவி செய்துள்ளீர்கள்?

✪ *பதில்:* இருமுகாம்களை நடத்தி வருகின்றோம். முல்லைத்தீவு, மாத்தறை ஆகிய இடங்களில் இந்த முகாம்களை அமைத்துள்ளோம்.

இதற்கு மேலதிகமாக நான்கு கிரிக்கெட் கிராமங்களை அமைக்கவிருக்கின்றோம். கிளிநொச்சி, அம்பாறை, களுத்துறை, மாத்தறை ஆகிய இடங்களில் இந்தக் கிராமங்கள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு கிராமத்திலும் 50 வீடுகள், சமூக சேவை மன்றம், சிறுவர் விளையாட்டரங்கு, சிறுவர் கல்வி நிலையம் ஆகியன அமைக்கப்படும்.

### அநாதைச் சிறார்களைப் பராமரிக்கத் திட்டம்

அநாதைகளாக இருக்கும் ஆயிரம் சிறுவர்களைப் பராமரிக்கும் திட்டம் ஒன்றை முன்னெடுத்துவருகின்றோம். பத்து வருடங்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கி அவர்களைப் பராமரிக்கவிருக்கின்றோம்.

தெற்கில் 225 சிறுவர்களை இனங்கண்டுள்ளோம். கிழக்கு, வடக்கு மாகாணங்களில் 100 சிறுவகளைத் தேர்ந்தெடுக்கக் குழு ஒன்று செல்கின்றது. பொலன்நறுவவிலும் சிறுவர்களைச் சேர்க்க இருக்கின்றோம்.

மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பதுடன், மேலதிகமாகப் பள்ளித்தேவைகள், சீருடைகள் போன்றவற்றையும் வழங்கவிருக்கிறோம்.

### முரளி நாட்டின் சொத்து

❑ *கேள்வி:* யாழ். கிரிக்கெட் வீரர்களுக்கு என்ன செய்தியை விடுக்க விரும்புகிறீர்கள்?

✪ *பதில்:* முத்தையா முரளிதரன் மிகவும் கெட்டிக்காரன். இலங்கைக்குக் கிடைத்த சொத்து அவர். இலங்கைக்கு மட்டுமல்லாது உலகுக்குக் கிடைத்த சொத்து. அவருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

முரளியை உதாரணமாகக் கொண்டு மேலும் வடக்கில் இருந்து கிரிக்கெட் வீரர்கள் வரவேண்டும். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

நல்லொழுக்கம் உள்ள மனிதர்களைக் கிரிக்கெட் உருவாக்கும். விளையாட்டு ஊடாக இந்த நாட்டை அபிவிருத்திசெய்ய முடியும் சகலரும் ஒன்றாக இணைந்து வாழலாம்.


இளம் வீரர்கள் கிரிக்கெட்டை விளையாட ஆரம்பிக்கவேண்டும் சகல வசதிகளையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

❑ *கேள்வி:* லயன்ஸ் கழகம் விளையாட்டுத்துறையில் என்ன உதவிகளை வழங்குகின்றது?

✪ *பதில்:* லயன்ஸ் கழகம் ஊடாக விளையாட்டு ஊக்குவிப்பினைச் செய்து வருகின்றோம். பலதரப்பட்ட கிரிக்கெட் உபகரணங்கள் என்னிடம் உண்டு. லயன்ஸ் கழகம் ஊடாக வழங்கவிருக்கின்றோம். அருகில் உள்ள லயன்ஸ் கழகம் ஊடாகத் தொடர்பு கொண்டு கிரிக்கெட் உபகரணங்களைப் பெறமுடியும். ✣


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 . 06 . 1920



மறைவு 13 . 02 . 2005

### அமரர் சபாபதி வேலாயுதபிள்ளை

13.02.2005 ஞாயிற்றுக்கிழமை இறைபாதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து உடன்வந்து எமக்கு ஆறுதல் அளித்தோர்க்கும் தொலைபேசி மூலமும் தொலைநகல் மூலமும் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் மற்றும் சகலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை 15.03.2005 செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.தெய்வேந்திரன் - மருமகன், வே.சிவகடாட்சம் - மகன்,
தெ.யோகேஸ்வரி - மகள், சி.யோகாம்பிகை - மருமகள்.

**பேரமக்கள் :**

தெ.யோகேந்தின் + சசிரேகா, தெ.கோகிலேந்திரன்+ றெஜினா } பிரான்ஸ்.
தெ.சுரேந்திரன் + குமுதினி (மட்டக்களப்பு) .
தெ.பாலேந்திரன் + சிவித்திரா (ஜேர்மனி).
க.பத்மஜோதி + கமலநாதன் (நோர்வே).
தெ.தியாகேந்திரன்(போராளி கண்ணன் நேரு).
தெ.குகேந்திரன் (தமிழீழ வைப்பகம்).
தெ.யுகேந்திரன் (தொழில்நுட்பக் கல்லூரி).
தெ.துஸ்யேந்திரன் (போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு).
தெ.அஜந்தாயினி (மாணவி).
தெ.டர்சிகா (மாணவி. கிளிநொச்சி மத்திய கல்லூரி).
சி.சகிலன் (பிரான்ஸ்).

**பூட்டமக்கள்:**

கோ.அபிரா, கோ.இந்துரன் } பிரான்ஸ்.
சு.தனுசாத் (மட்டக்களப்பு).

(34468)( 55-16-15-18-24)

2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.
103, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

குடும்பத்தினர்.



**PRE CERTIFICATE**
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் வளர்ந்தோருக்கான விசேட ஆங்கில பாடநெறி.

**PRE FOUNDATION**
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் சிறார்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி

**பாடநெறி விதானம் (காலம் 6 மாதம்)**

- அடிப்படை ஆங்கில பேச்சுப்பயிற்சி
- ஆங்கில சொல்வளத்தை மேம்படுத்தல்
- ஆங்கில சொல் பிரயோகம், உச்சரிப்பு
- ஆங்கிலத்தில் உரையாடல்
- ஆங்கில இலக்கண தொழிற்பாட்டை மேம்படுத்தல்
- ஆங்கிலம் எழுத்துக்கூட்டி வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் எழுதப்பயிலுதல்
- பல்வேறு பாத்திரங்களிற்கு ஏற்ப பேசுதல்.



**BRITISH BUSINESS SCHOOL**
NO.140, TEMPLE ROAD, JAFFNA.





காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்

## ஈழத்துச் சிதம்பரம்



வருடாந்தப் பங்குனி மகோற்சவம்-2005

*சிவநேயர்களே!*

நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 03 ஆம் நாள்(16.03.2005) புதன்கிழமை வருடாந்தப் பங்குனி மகோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### மகோற்சவ கிரியை விவரம்

**16.03.2005 பங்குனி 03 ஆம் நாள் புதன்கிழமை**
**கொடியேற்றம்:** காலை 10.00 மணியளவில் கொடியேற்றம். அதனைத் தொடர்ந்து சுவாமி இடப வாகனத்தில் திருவீதி உலா வருதல்.

**19.03.2005 பங்குனி 06 ஆம் நாள் சனிக்கிழமை**
**கைலாசவாகன உற்சவம்:** மாலை 6.00 மணியளவில் கைலாசவாகனத்தில் சுவாமி திருவீதி உலா வருதல்.

**22.03.2005 பங்குனி 09 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**வேட்டைத் திருவிழா:** மாலை 6.30 மணியளவில் எம்பெருமான் பரிவார மூர்த்திகளுடன் வேட்டைக்கு எழுந்தருளல்

**23.03.2005 பங்குனி 10 ஆம் நாள் புதன்கிழமை**
**சப்பரத் திருவிழா:** மாலை6.30 மணியளவில் எம்பெருமான் பெரிய சப்பரத்தில் திருவீதி உலா.

**24.03.2005 பங்குனி 11 ஆம் நாள் வியாழக்கிழமை**
**தேர்த் திருவிழா:** காலை 8.00 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் காலை 10.00 மணிக்கு சோமாஸ்கந்தர் பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளிப் பஞ்சரத பவனி நடைபெறும்.

**25.03.2005 பங்குனி 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**தீர்த்தோற்சவம்:** காலை 7.00 மணிக்கு நடேசர் உற்சவம், காலை 10.00 மணிக்கு சுவாமி சமுத்திரத் தீர்த்தோற்சவமும் மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

**26.03.2005 பங்குனி 13 ஆம் நாள் சனிக்கிழமை**
**திருக்கல்யாண உற்சவம்:** காலை 10.00 மணிக்கு அம்பாள் எழுந்தருளி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் தவசு இருத்தல், மாலை 6.30 மணிக்குத் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று எம்பெருமான் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

**முக்கிய குறிப்பு**

நடராஜப் பெருமானுக்குத் தங்கத்தினால் மேல் கவசம் செய்தல், வேலை காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகும். அடியார்கள் அன்பளிப்புச் செய்வோர் அன்பளிப்புகளைத் தேவஸ்தானத்தில் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

**குறிப்பு**

1. நடராஜப் பெருமானின் சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்த் திருப்பணிக்குப் பண உதவி செய்யவிரும்புவோர் தேவஸ்தான அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.
2. பத்திரகாளி அம்மன் பொங்கல் 14.03.2005 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு.
3. ஐயனார் பொங்கல் 30.03.2005 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறும்.

விசேட குறிப்பு: தினமும் யாழ். பேருந்து நிலையத்திலிருந்தும் ஆலயத்திலிருந்தும் பேருந்துகள் சேவையில் ஈடுபடும். தினமும் மாகேசுவர பூஜை நடைபெறும்.

காரைநகர் சிவன் கோயில்,
காரைநகர்.

ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தர்கள்.



உ

## நிறுவனத் திறப்புவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனி மாதம் முதலாம் நாள்
இன்று (14.03.2005) திங்கட்கிழமை முற்பகல் 9.45 மணி தொடக்கம் 10.35 மணி
வரையான சித்த யோகமும் இடப லக்கினமும்
கூடிய சுபமுகூர்த்தவேளையில்
எம்மால் புதிதாக நிறுவப்பட்ட

## கலாபா

(மென்பானம், குடிதண்ணீர் உற்பத்தி)

என்னும் புதிய நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளோம். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து வாழ்த்திச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

கலாபா இன்டஸ்றீஸ்
வல்லை வீதி,
சங்கானை.

சீ.கோபிதாசன்
நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா இரவிராஜ் அவர்களின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்.

## KALABA

Soft drink & Mineral Water industries cordially invite on the occasion on of the opening Ceremony of our Factory on the auspicious time between 9.45 a.m. to 10.35 a.m. on the 14th march 2005 to grace the occasion.

Vallai Road,
Chankanai.

S.Gobithasan
Co-ordinator for the M.P. of Jaffna District, Hon. Nadarajah Ravirajah.

(C/41470)(24-18-16)

முல்லைத்தீவு பதிவகத்தில் ஆளணிப் பற்றாக்குறை

# சுனாமியால் இழந்த ஆவணங்களை மீளப் பெறுவதில் மக்கள் சிரமம்!

புதுக்குடியிருப்பு,மார்ச் 14

முல்லைத்தீவு மாவட்ட பதிவகத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் மக்களுக்குரிய சேவையினை வழங்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தால் இந்த அலுவலகம் முழுமையாக அழிவடைந்தது. தற்போது இந்த மாவட்டச் செயலகத்தில் ஒரு அறையில் எவ்வித வசதிகளுமின்றி இயங்கி வருகிறது.

சுனாமி அனர்த்தத்தில் தமது இறப்பு, பிறப்பு ஆவணங்களை இழந்த மக்கள் அவற்றை மீளப் பெறுவதில் ஆர்வம்காட்டி வருகின்றனர். இவர்களுக்கான பத்திரங்களை வழங்குவதற்கு அலுவலகத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால், மக்கள் தமது பத்திரங்களைப் பெறுவதற்காகப் பதிவகத்தில் தவம் கிடகக வேண்டியுள்ளது.

இந்தப் பதிவகம் முல்லைத்தீவு மாவடடச் செயலகத்தில் சிறிய அறை ஒன்றிலேயே இயங்குகிறது. அங்கு தளபாட மறறும் ஏனைய வசதிகள்கூட போதியளவில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு இதுவரை உரிய உதவிகள் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் வரை தமது ஆவணங்களை இழந்துள்ளனர். இவர்கள் தமது ஆவணங்களை மீளப்பெற உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-353-204)

## சிறப்புற நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வுகள்

ஒட டுசுட்டான்,மார்ச் 14

ஒட்டுசுட்டான் பிரதேச ஆலயங்களில் சிவராத்திரி நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

கற்சிலைமடு சமளந்துமாய் பிள்ளையார் ஆல்யத்தல் விசேட பூசைகள், ஆராதனைகள் நடத்தப்பட்டு சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேபோல ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் சிவராத்திரி தினம் வெகு விமரிசையாக அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மாணவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

இதேபோன்று பண்டாரவன்னியன் சிலையருகே உள்ள வைரவர் கோயிலிலும் விசேட பூசைகள் இட்ம்பெற்றன. (த-341-203)

★ ★ ★

முழங்காவில்,மார்ச் 14

முழங்காவில் செல்வயோக சித்திவிநாயகர் ஆலயம், செல்லக்கதிர்காம ஸ்ரீ முருகன் அலயம், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அமமன் ஆலயம், பல்லவராயன் கட்டு சோலை அருள்மிகு ஸ்ரீ சோலை முருகன் ஆலயம், ஜெயபுரம் ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களில் சிவராத்திரி தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சிவராத்திரி நிகழ்வுகளில் இவ் ஆலயங்களில் நான்கு சாமப் பூசைகள், சிறப்பு ஆபிஷேகங்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-323-203)

★ ★ ★

முழங்காவில்,மார்ச் 14

பொன்னாவெளி, உண்ணாமுலை உமையாள் சமேத அண்ணாமலைச் சிவாலயத்தல் சிவராத்திரி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

பூசைகளைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் பூநகரி உதவி அரச அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் பூநகரி ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர் து.இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் என்பன இடம்பெற்றன. (த323-203)

## மாங்குளம் வீதியில் யானைகள் நடமாட்டம்

புதுக்குடியிருப்பு,மார்ச் 14

ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகத் தொிவிக்கப்படுகிறது.

மாலை 6 மணிக்குப் பின்னர் யானைகள் கூட்டமாகவும், தனியாகவும் வீதிகளில் நிற்கின்றன. இதனால், மக்கள் இவ்வீதிகளில் பிரயாணம் செய்ய அஞ்சுகின்றனர். ஒரு சிலரை யானைகள் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-353-204)

## பூநகரிப் பாடசாலைகளுக்கு எழுதுபலகைகள்

முழங்காவில்,மார்ச் 14

பூநகரிக் கோட்டத்திற்குட்பட்ட 24 பாடசாலைகளுக்கு 120 எழுதுபலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'யக்கா' நிறுவனத்தினரால் பூநகரி மகாவித்தியாலயத்தில் வைத்து இவை வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.குருகுலராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளையும் கலந்துகொண்டார்.

அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் அங்கு வந்து தமக்குரிய எழுதுபலகைகளைப் பெற்றுக்கொண்டனர். (த-323-203)

## கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆவது ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 14

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆளுகைக்குட்பட்ட கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆவது அண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் முற்பகல் 11 மணியளவில் வவுனியா நெடுங்கேணி விவசாயப் போதனாசிரியர் நிலையத்திலும், நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியின் பூநகரிக் கிளையிலும். பிற்பகல் 2 மணிக்கு ,முல்லைத்தீவு மாவட்டத்தில் கற்சிலை மடு மகாவித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி வங்கியில தளிர் சிறார் சேமிப்பில் இணைந்து குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சிறார்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம் பெறும்.

அத்துடன், சுழற்சி முறைக்கடன் மூலம் நீர் இறைக்கும் இயந்திரங்கள், சோளர்கள், தையல் இயந்திரங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, நண்பகல் 12 மணிக்கு மன்னார் அடம்பன் கிளையில் தங்கநகை அடகு சேவையும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கிராமிய அபிவிருத்தி வங்கியானது 1993 ஆம் ஆண்டு கிராமிய நிதியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-203)




## கிளிநொச்சியில் பயிற்சி நிலையம் செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கும்

கிளிநொச்சி,மார்ச் 14

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடபிராந்திய பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டவிருக்கின்றது.

அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெகத் அபயசிங்க இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலுள்ள செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களுக்கான பயிற்சிகளுக்காக இந்த நிலையம் அமைக்கப்படவிருக்கின்றது. வடபகுதியின் 5 மாவட்டங்களுக்கும் மையப்படுத்தப்பட்ட இடமாக கிளிநொச்சி மாவட்டம் இருப்பதாலேயே மேறபடி பயிற்சி நிலையத்தைக் கிளிநொச்சியில் அமைக்கத் தீர்மானித்திருப்பதாக அதன் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-305)



ஜெயபுரம் அ.த.க.பாடசாலை முன்பாக இடம்பெற்ற விபத்தில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகி மரங்களுடன் மோதுண்டு நிற்பதைப் படத்தில் காணலாம். இந்த விபத்தில் லொறியின் முன்பக்கம் முற்றாகச் சேதமடைந்துவிட்டது. எனினும் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார். *(படம்: முழங்காவில் செய்தியாளர்)*

## கிளிநொச்சி மாணவருக்கு சித்திரம், சிற்பம் போட்டிகள்

கிளிநொச்சி,மார்ச்.14

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றம் நடத்தும் அழகெழல் - 2005 கலைத்துறைசார் போட்டிகளில் முதற்கட்டமாக சித்திரம், சிற்பம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான சித்திரப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

திறந்த சிற்ப ஆக்கப் போட்டிக்கான ஆக்கங்களைப் படைத்த மாணவர்கள், வெளியாள்கள் அனைவரும் அன்றைய தினமே தமது ஆக்கங்களை மேற்படிக் கல்லூரியில் ஒப்படைக்கலாம்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டி விண்ணப்பமுடிவு திகதி நாளை செவ்வாய்க்கிழமையாகும்.

போட்டிகள் நடைபெறும் நாளன்று அனைத்துப் போட்டியாளர்களும் உரிய நேரத்தில் கல்லூரிக்குச் சமுகமளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-203)

## வவுனியா கடைகளில் சைக்கிள்களுக்குத் தட்டுப்பாடு

புதுக்குடியிருப்பு,மார்ச்.14

வவுனியா நகரின் சைக்கிள் கடைகளில் சைக்கிள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு நகரில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளால் பெருமளவான சைக்கிள்கள் அடித்துச் செல்லப்பட்டது. இதையடுத்து, அப்பகுதி மக்கள் தமது பாவனைக்கென வவுனியாவிற்குச் சென்று சைக்கிள்கள் வாங்கிவருகின்றார்கள்

ஆயினும் கடந்த சில நாள்களாக அங்கு சைக்கிள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-353-202)

## ஜெயபுரத்தில் மக்கள் கடை

ஜெயபுரம்,மார்ச்.14

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஜெயபுரத்தில் மக்கள் கடையொன்றை அமைத்துள்ளது.

இக்கடையின் திறப்புவிழா கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது.

இத் திறப்புவிழாவில் தமிழீழத் தேசியக் கொடியை ஜெயபுரம் வலயப் பொறுப்பாளரும் கூட்டுறவுக் கொடியை சங்க உப தலைவர் சி.தவராஜசிங்கமும் ஏற்றிவைத்தனர்.

தொடர்நது கடையின் பெயர்ப்பலகையை சங்கப் பொதுச்சபை உறுப்பினர் திரைநீக்கம் செய்துவைத்தார். கடையைப் பூநகரி பிரதேச செயலரின் பிரதிநிதி கிராம சேவையாளர் இ.இராசரத்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஆசிரியுரையைத் தென்னிந்தியத் திருச்சபைப் போதகரும் சிறப்புரைகளை ஜெயபுரம் பாடசாலை ஆசிரியை சித்திரா, சங்கப் பொதுச்சபை உறுப்பினர், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத தலைவர் கா.கார்த்திகேசு, உப தலைவர், கிராம சேவையாளர் ஆகியோர் நிகழ்த்தினர். (த-291-202)

## வன்னியில் இப்போது கொய்யாப்பழ சீசன்

புதுக்குடியிருப்பு,மார்ச் 14

வன்னிப்பிரதேசத்தில் தற்போது கொயயாப்பழ சீசன் ஆரம்பித்துள்ளது. ஒரு பழம் 50 சதம் முதல் ஐந்து ரூபாவரை விற்கபபடுகிறது. மாங்குளம, ஒட்டுசுட்டான், நெடுங்கேணிப் பகுதியில் கடைகள், சந்தைகளில் கொய்யாப்பழம் குவியல் குவியலாகக் காணப்படுகிறது.

சிறிய பழங்கள் 50 சதம் 2 ரூபாவரையிலும் ஆனைக்கொய்யா போன்ற பெரிஇனப்பழங்கள் 5 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பு, வவுனியா வியாபாரிகள் நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் பகுதிகளுக்குச் சென்று இவற்றைக் கொள்வனவு செய்து வந்து விற்கின்றனர். (த-353)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

புதுக்குடியிருப்பு,மார்ச் 14

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் இந்த நாய்களினால் போக்குவரத்துச் செய்வோர் பல்வேறு சிரமங்களை அடைகின்றனர். விபத்துக்களும் ஏற்படுகிறது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபை கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான வண்டில்கள் வைத்திருநத போதிலும், அவற்றைப் பயன்படுத்திக் கட்டாக்காலி நாயகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-353-204)

## ஒட்டுசுட்டான் வீதி தொடர்ந்தும் மோசம்

ஒட்டுசுட்டான்,மார்ச் 14

ஒட்டுசுட்டான் பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படாதுள்ளமையால் அவ்வீதியால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இவ்வீதி 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், அது தொடர்பாக இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவசர நோயாளர்களைக்கூட இவ்வீதியால் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, உரியவர்கள் இதனைக்கவனத்தில் எடுத்து இவ்வீதியைப் புனரமைப்புச் செய்யவேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (த-341-203)

## உளங்கனிந்த வாழ்த்துக்கள்



பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட
**உயர்திரு. கந்தையா கணேஸ் அவர்கள்**
யாழ். மாவட்ட அரச அதிபராகவும் யாழ். மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவராகவும் பதவியேற்றுள்ளமையைப் பாராட்டுவதுடன், அவர் வளமுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அம்பிகை சனசமூக நிலையம்,
ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், ஐக்கிய விளையாட்டுக்கழகம்,
அம்பிகை மழலைகள் கல்விப் பூங்கா,
பொலிகண்டி கிழக்கு சமக்காரர் அமைப்பு, பொலிகண்டி கிழக்கு மக்கள்.

பொலிகண்டி கிழக்கு.
வல்வெட்டித்துறை.
(43070) (24-16-18)

விளம்பர அனுசரணை: ந.பாஸ்கரசோதி
BAS TRANSPORT
கட்டட ஒப்பந்தகாரரும் கட்டடப் பொருள்கள் விற்பனையாளரும் பொலிகண்டி.



உ
**இளவாலை**
**அருள்மிகு ஆனைவிழுந்தான் விநாயகர் தேவஸ்தான**
## மஹோற்சவ விஞ்ஞாபனம்

14.03.2005 திங்கட்கிழமை காலை 10.30 மணிக்குக் கொடியேற்றம்
24.03.2005 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்குத் தேர்த்திருவிழா
25.03.2005 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்குத் தீர்த்தோற்சவம்
மாலை 7 மணிக்குக் கொடியிறக்கம் (43076) (24-16-18)

அனைவரும் வருக! அருளைப் பெறுக!
- விழா உபயகாரர்கள்.



இப்பொழுது இலங்கையில்
அக்யூரேட் ஜாக்குவார்
சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்



Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs
Direct Importers Wholesalers & Retailers
SOLE DISTRIBUTORS
OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel: 2336720, 2327168 Wholesale: 2384131
Fax: 2326961 E-mail: oceanick192@yahoo.com



## மணமகள் தேவை

அமெரிக்காவில் வேலை பார்க்கும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கணனிப் பொறியியலாளர் M.Sc. வயது 30, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு (கார்த்திகை நட்சத்திரம், நாலாம் பாதம், உயரம் 5'7") (குற்றமற்ற சாதகம்) விஞ்ஞானப் பொறியியலாளர், பட்டதாரி, மருத்துவர் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
விளம்பர இல. 2526
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(43078) (24-16-18)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவர்.

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2459
(43079) (24-16-18)



## WALK IN INTERVIEW

Applications are invited from qualified and experienced persons to fill the following vacancies.

- **Lecturers Visiting Lecturers**
The ideal candidate should be a B.Sc. degree holder in computer Science from any University in Sri Lanka or abroad or any other Professional body. Fluency in English and ability to correspond in this language is an advantage.

- **Instructors and Assistants**
Undergraduates who are holding diploma certificates in computer applications from recognized Institutions.

Those who interested are requested to call over at this office with their CVs and Originals of the relevant Certificates on 20th March 2005 from 10.00 a.m. - 1.00 p.m.

(C/41477) (24-18-16) **DIRECTOR.**

**INSTITUE OF INFORMATICS STUDIES**
**100, CLOCK TOWER ROAD, JAFFNA.**


## நாயகன் யேசுவை முன்னோடியாகக் கொள்

### தவக்காலச் சிந்தனை

### முப்பத்திநான்காம் நாள்

இன்று எங்கு நோக்கினும் அநீதி தலைவிரித்தாடுகிறது. முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் எனப் பல நாடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் மனிதமாண்பு, மனிதநேயம், மனிதாபிமானம் சிறிதுசிறிதாகச் சின்னாபின்னமாக்கப்பட்டு அநீதி அமைப்புகளால், சமுதாய அமைப்பு சிக்கல்களால் மனிதன் அடிமைப்படுத்தப்படுகிறான். சாதியின், பொருளாதாரத்தின், மதத்தின், மொழியின் பெயரால் மனிதனை சமுதாயம் பிரித்து வைத்துள்ளது.

இந்த நிலையில், மனித கட்டுக்களில் இருந்து முழுமனித விடுதலைபெற விடுதலை நாயகன் இயேசுவை முன்னோடியாகக் கொள்வது அவசியமாகிறது. இயேசு அன்று ஆதிக்க சக்திகளுக்கு ஓர் எதிர் சக்தியாக - சவாலாக - இருந்தாக இப்படிப்பட்ட விடுதலை விரும்பி இயேசுவுக்கு நாம் எவ்வாறு சான்று பகிரப்போகிறோம்.

ஆடம்பர வழிபாடுகளாலோ, உயர்ந்த கோபுரங்களாலோ, அல்லேலூயா ஆரவாரங்களாலோ அல்ல. இதனால், நிச்சயம் இயேசுவுக்குச் சான்று பகரமுடியாது. எம்மில் ஏற்படும் மனமாற்றம்தான் இதற்கு முடிவு கூறும்.

இயேசு கொண்டதோ விடுதலை வேட்கை, வறுமை, பட்டினி, பிணி, மூடநம்பிக்கைகள், அறியாமை, அநீதிகள், சாதி, சமய, அதிகார வெறிகள், அத்துமீறல்கள் போன்ற சக்திகளுக்கு எதிராக நாம் தொடுக்கும் போராட்டமும் அதனால், நாம் பெறப்போகின்ற காயங்கள், தழும்புகளே இறை அனுபவத்தைத் தரும் இயேசுவின் சான்றுகளாக இருக்கமுடியும்.

இன்று எமக்கு சகாரியர்கள் யார்? யேசுவைப்போல் பாரம்பரியங்களை உடைத்துக்கொண்டு விடுதலை வழங்கத் தயாரா? எமது செயற்பாடுகள், பங்கேற்பு, ஈடுபாடு அத்தனையையும் கேள்விக்குள்ளாக்கிப் புது உலகைப் படைப்போம்.

மரங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனவாம். மனிதர்கள் எம்மைக் கொண்டு சிலுவையைச் செய்கிறார்களே. தங்களைக் கொண்டு ஒரு இயேசுவைச் செய்யமுடியவில்லையே என்று.

எனவே, விடுதலை தரும் இயேசுவை உள்ளத்தில் உருவாக்குவோம். அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெறத் துடிக்கும் அனைத்து ஏக்கவிழிகளுக்கும் நம்பிக்கையின் ஒளி கொடுக்க கலப்பையில் கைவைப்போம். திரும்பிப் பார்க்கமாட்டோம் என்ற உறுதியுடன் தவக்காலம் விடுதலை தருகின்ற காலமாக அமையட்டும்.

- எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 661 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 08-3-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5299729 - 5314924 |

வெற்றி இலக்கங்கள்
**05 22 31 34**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்பட்டுள்ளது
இந்த செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,32,050 | 10/- | 33,20,500/- |
| 2.இலக்கங்கள் | 30,480 | 20/- | 6,09,600/- |
| 1.இல + லக்கினம் | 30,217 | 30/- | 9,65,510/- |
| 2.இல + லக்கினம் | 2,767 | 100/- | 2,76,700/- |
| 3.இலக்கங்கள் | 801 | 500/- | 4,00,500/- |
| 3.இல + லக்கினம் | 72 | 5,000/- | 3,60,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 3,96,397 | - | 83,26,060/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 83,26,060/-

தொடர் இல. 4349506 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும், வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**5304904-3-70**
**5312781-1-55**
**5311696-0-32**
**5309313-3-88**
**5303547-6-98**

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கந்தப்பு



(ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்ரர்)

"ராணி மாளிகை", அந்திரான் கரவெட்டி வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு கந்தப்பு 11.03.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் சிவஞானவதியின் அன்புத் துணைவரும் இந்திராணி (நூலகர் - கொழும்பு), வசந்தராணி (கனடா), Dr.விஜயராணி (லண்டன்), Eng. மனோராணி (கனடா) ஆகியோரின் அன்புத தந்தையும் மகேசன் (கொழும்பு), சசிதரன் (கனடா), சிவனருள் (லண்டன்), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் பிரிய மாமனாரும் பிரதீபன், சஜீபன் (கொழும்பு), சாரங்கா, ரேணுகா (கனடா), அஸ்வின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சிவகாமி, தெய்வானை, பார்வதி, சபாரத்தினம் மற்றும் இரத்தினசபாபதி (கட்டடப் பரிசோதகர், கட்டடங்கள் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் கிருஷ்ணபிள்ளை, சற்குணம், சதாசிவம், அருந்ததி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
T.P. No.: 0777 570110 (43074) (24-16-18)
தகவல்: மனைவி, மக்கள்,
சகோதரன்: கா.இரத்தினசபாபதி.

## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 ✣ 05 ✣ 1938



மறைவு
14 ✣ 03 ✣ 2001

### திருமதி வல்லிபுரம் இராசமணி

ஆண்டுகள் நான்கு ஆனபோதும் ஆறவில்லை மனம்
ஈன்று உங்களை நினைந்தே வாழ்கின்றோம்
மாண்டு நீங்கள் போனாலும் மறக்கவே மாட்டோம்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

க.வல்லிபுரம் (கணவர்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

சாந்தை.
பண்டத்தரிப்பு.
(43069) (24-16-18)

## சீன நிறுவனம் உதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் ரயில்வே தண்டவாளங்களைச் சீர் செய்வதற்காக இரண்டு கோடி ரூபா பெறுமதியான நவீன இயந்திரங்களையும் உபகரணங்களையும் சீன நிறுவனமொன்று இலங்கைக்கு வழங்கியுள்ளது.

## 31ஆம் நாள் நினைவுகளும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 05 - 10 - 1923



மறைவு 14 - 03 - 2005

### அமரர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

அன்பும் பண்பும் நிறைந்த எம் அன்புத் தெய்வமே! நாம் ஆற்றுவாரோ தேற்றுவாரோ இன்றி இன்று தவிக்கிறோம். ஆறுதல் சொல்ல யாருமில்லையே.

14.02.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (14.03.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில். (அ-41485)(30-11-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 - 07 - 1924



மறைவு 12 - 02 - 2005

### அமரர் கணபதி கிருஷ்ணபிள்ளை (கடவுள்)

*மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்த்தீர் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.*

எங்கள் அன்புத் தெய்வம் நோயுற்றுப் படுக்கையில் இருந்த வேளையில் அல்லும், பகலும் நித்திரை விழித்து அவரைப் பராமரித்த எங்கள் உறவினர்களுக்கும் அவர் எங்களை விட்டுப் பிரிந்தபோது உடன் உரிய நடவடிக்கைகள் எடுத்து கடமை செய்தோருக்கும், இறுக்கிரியைகளின் போது கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்திய சமாச அங்கத்தவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (14.03.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் சபீண்டிகரணக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*செட்டியகுளர்,*
*தொண்டைமானாறு.* (43065)(30-11-17)
*0777-170741, 0776-172545*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.


## காணி, வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் மத்தி, கண்டி வீதியில் 4 1/2 பரப்புக் காணியில் தனிக்கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0773 - 107026. (43082)(30-11-17)

**லஷ்சுமி** இணுவில்

சிநேகா, அப்பாஸ் நடித்த
**அது** (சினிமா)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த
**மாயாவி** (சினிமா)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இன்று 14.03.2005 முதல்
பிரசன்னா-ஸ்ருதராஜ்-வடிவேலு-அனு-சேகர் நடித்த
**காதல் டாட் காம்**
எமது அடுத்த இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில்
தாவடி மைந்தன் நடிக்கும்
**குருதேவா** விரைவில் எதிர்பாருங்கள். (C/41480)
காட்சி நேரங்கள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
**லண்டன்** (சினிமா)
இயக்கம்: சுந்தர் C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய், திரிஷா நடித்த
**திருப்பாச்சி**
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.) (C/41377)(26-16-17)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த



**ஏய்** (சினிமா)
தினசரி
11.00. 3.00. 7.00 (பு.நே)


## 12.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிதா வாசனாவ

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300127179 இலிருந்து 300145018 வரை

சீட்டிழுப்பு இல. 1589

**08 18 44 68** சுப்பர் எண் **01**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.99,84,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,09,07,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 29 | 5,000/- | 1,45,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 480 | 1,000/- | 4,80,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,499 | 500/- | 7,49,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,253 | 40/- | 9,30,120/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,982 | 20/- | 4,39,640/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,30,052 | 10/- | 33,00,520/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.85,44,780/-

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,17,89,400/-**

தொடர் இல. 200152722 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 16 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300137080-7-17
300132918-1-80
300128520-6-58
300129188-6-23
300139214-9-50

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா நாகலிங்கம்



புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவரும தற்போது யாழ்ப்பாணம்,அத்தியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி செல்லம்மா நாகலிங்கம் அவர்கள் 12.03.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரிகரன் மற்றும் லிங்கேஸ்வரி (ஆரணி - சுவிஸ்), அவர்களின் அருமைத் தாயாரும் லிங்கேந்திரனின் (சுவிஸ்), அன்பு மாமியும் கேசிங், ஆருஜா, ஆரபி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான பாக்கியலெட்சுமி, நடராசா, கனகசபாபதி, விஜயலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற சுப்பையா மற்றும் சிவக்கொழுந்து (கனடா), கனகசுந்தரம் (கொழும்பு), மகாலெட்சுமி (கனடா), ருக்மணிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள நாளை (15.03.2005) செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு அத்தியடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/18,குறுக்கு வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* T.P.: 021 222 7564

தகவல்:
தா.நாகலிங்கம் (கணவர்),
பத்மநாதன் கெளரி (பெறாமகள்) (43081)(11-17-30)

## சண்முகம் கதிர்காமசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஊழியர், காணிப்பதிவகம், பருத்தித்துறை)



மேலைப்புலோலி, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கதிர்காமசுந்தரம் அவர்கள் 12.03.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (லண்டன்), குலேந்திரன் (லண்டன்), பவானி (பிரான்ஸ்), சுபாஜினி (கனடா), ராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சற்குணராசா (கனடா), விஜயலட்சுமி (லண்டன்), சிவரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருஷன், நிரோஜனா, ஜனீசன், நிசானி, அஜந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2005) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது சகோதரர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பாவத்தை வீதி,*
*புலோலி மேற்கு,தம்பசிட்டி,*
*பருத்தித்துறை.* (43084)(11-17-30)

தகவல்:
பொன்.தங்கராசா (மருமகன்).
T.P.: 077 3086775

## செல்வி பொன்னுக்குட்டி சந்திராதேவி

இல.02,ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,அரியாலையைச் சேர்ந்த செல்வி பொன்னுக்குட்டி சந்திராதேவி அவர்கள் நேற்று (13.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுக்குட்டி மற்றும் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் சரஸ்வதி, சுசீலாதேவி, கருணேஸ்வரன (பிரான்ஸ்), கருணாசேகரன் (வருமான மேற்பார்வையாளர், வேலணைப் பிரதேச சபை) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.02,ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,*
*அரியாலை.* (43089)(11-17-30)


தகவல்:
பொ.கருணாசேகரன் (சகோதரர்).


## இதோ! டிஜிற்றல் தொழில் நுட்பத்தினைக் கொண்டாட எம்முடன் நீங்களும் இணையுங்கள்!

**சுப்பஸோ டிஜிற்றல் கலர் லாப்**

கொழும்பில் மூன்றாம் ஆண்டை நிறைவுசெய்து நான்காம் ஆண்டில் காலடி பதிக்கும் **சுப்பஸோ டிஜிற்றல் கலர் லாப்** இப்பொழுது இலங்கையில் முதன் முறையாக FRONTIER 570 FUJI MINI LAB என்னும் புதிய டிஜிற்றல் இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

- 4 R (4" X 6") அளவிலான 24 பிரதிகளை 2 நிமிடம் 6 செக்கனில் மிக வேகமான படப் பிரதியாக்கம்...
- 3 R அளவு முதல் 12" X 18" அளவுவரை தேவைக்கேற்ற அளவுகளில்...
- வாழ்த்து அட்டைகள் மற்றும் கலண்டர் அழகுற அமைத்திட...



- புகைப்படத்தில் உள்ள தூசி அழுக்கு என்பவற்றை தன்னியக்கமாக அகற்றிப் பெற்றிட...
- தரமான முறையில் உங்கள் புகைப்படச் சுருள்கள் மற்றும் CD பிளப்பி, டிஸ்க், சிப், MO டிஸ்க் ஆகியவற்றில் இருந்து சிறந்த முறையில் பிரதி செய்து பெற்றிட...
- தன்னியக்க ரெட் ஐ (Red Eye) செயற்பாடு...
- லேசர் தொழில்நுட்பம்... & 600 DPI பிரதியாக்கத் தொழில்நுட்பம்...
- இவை யாவும் ஒருங்கிணைந்த சேவையாக நீங்கள் பெற்றிட எம்முடன் இணையுங்கள்.

**சுப்பஸோ டிஜிற்றல் கலர் லாப்,**
**206, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.**
**T.P. : 0114618370**

மிக விரைவில் யாழ். நகரிலும் டிஜிற்றல் மினி லாப்பினை ஆரம்பிக்க உள்ளோம் என்பதினை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

**149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P. : 021 2222082.**

(அ-44187)(30-11-17)

# ஆரையம்பதி பிரதேச செயலக வளாகத்திற்குள் புதைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருள்கள் மீட்பு!

## பிரதேச செயலருக்கு எதிராக மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

ஆரையம்பதி, மார்ச்14

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி பிரதேச செயலகத்தின் வளவிற்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான நிவாரணப் பொருள்கள் நேற்று பொதுமக்களால் அங்கிருந்து கிண்டி எடுக்கப்பட்டன.

அங்கு பொருள்கள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்து பிரதேச செயலக வளவுக்குள் நுழைந்த பெருமளவான மக்கள் மண்ணைத் தோண்டி பொருள்களை வெளியே எடுத்தனர். அவை அனைத்தும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிக்காக வழங்கப்பட்ட பொருள்களாகும். மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தன.

நிலத்தில் இருந்து 5 அடி ஆழத்தில் மருந்து, அரிசி, பருப்பு, சீனி, கருவாடு, பால்மா, கோதுமை மா, தேயிலை, மிளகாய்த்தூள் மற்றும் பனடோல் உட்பட பெருந்தொகையான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் பொதுமக்களால் மீட்கப்பட்டன.

இதனையடுத்து, ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டனர். பிரதேச செயலாளரினதும், உதவிப் பிரதேச செயலாளரினதும் அலுவலகங்களைத் தாக்கினர். அலுவலகக் கண்ணாடிகளையும் கதவுகளையும் அடித்து நொறுக்கினர். பிரதேச செயலாளரின் வாகனத்தையும் சேதப்படுத்தினர்.

நிலைமையைக் கட்டுப்படுத்தவென அங்கு வந்த பொலீஸாரும் விசேட அதிரடிப்படையினரும் பொதுமக்கள் மீது தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். எனினும் ஆத்திரமடைந்திருந்த மக்கள் கூட்டம் அங்கிருந்து நகரவில்லை.

பிரதேச செயலாளரைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி மக்கள் மறியல் செய்தனர். இதனால் பலமணிநேரம் அமளிதுமளி ஏற்பட்டது. பின் பிரதேச செயலாளரின் அறைக் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற மக்கள் அரிசி, பருப்பு மற்றும் சீனி போன்ற பொருள்களை பிரதேச செயலாளரின் முகத்தில் வீசி எறிந்தனர்.

உடனே பொலீஸார் விரைந்துசென்று அவர்களை வெளியே துரத்தி பிரதேச செயலரை மீட்டனர். பிரதேச செயலகத்தின் பிரதான வாயிலை மூடினர்.

உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கே.பத்மசிறி தலைமையிலான பொலீஸ் குழுவினர் மக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர். எனினும் மக்கள் கட்டுப்படுவதாக இல்லை. தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால், மீட்கப்பட்ட பொருள்களிலிருந்த பனடோல் மாத்திரையில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளே காலாவதி தினமாகப் பொறிக்கப்பட்டிருந்தது என்று அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

(எ-க-13-190)

# ஒகஸ்டில் பெரும் எதிர்ப்புப் போராட்டம் அத்தோடு ஜனாதிபதி நடையைக் கட்டுவார்

அரசின் அரசியல் கபட நாடகம் அம்பலாகி வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மக்கள் ஆங்காங்கே கிளர்ந்தெழுந்து அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிவிட்டனர் ஐ.தே.க. ஒகஸ்டில் கொழும்பில் நடத்தும் இறுதி எதிர்ப்புப் போராட்டத்துடன் ஜனாதிபதி நடையைக் கட்டிவிடுவார். அவரது கூட்டாளிகளின் கொட்டமும் அடங்கிவிடும் - என்கிறார் ஐ.தே.கட்சி எம்.பியான ராஜித சேனாரத்ன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்தபோதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ளபாரிய விரிசல் காரணமாக அரசின் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்வதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர். ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு வீடு கூட இதுவரை உத்தியோகபூர்வமாக வழங்கப்படவில்லை, ஜனாதிபதியால் அமர்களமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட அம்பாந்தோட்டை வீடமைப்புத்திட்டம் இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் எதுவும் நடக்காமல் தொங்கிப் போய் நிற்கிறது. ஜனாதிபதிக்கும் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவுக்கும்இடையில் பெரிய கருத்து முரண்பாடுகள், மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முற்பட்டாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதற்கு எதிராகவே செயற்படுவார்.

கரையோரப் பிரதேச மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்துவதற்காக அவசரகாலச்சட்டத்தை பிரகடனம் செய்தார் ஜனாதிபதி. அவரை எதிர்க்கும் மக்களை அடக்குவதற்காக இராணுவத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார். ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் அமைதியாகச் செய்த போராட்டம் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது ஜனாதிபதி என்பவர் இந்த நாட்டின் முடிக்குரிய மகாராணியல்லர். அவர் தான் மக்களின் வாக்குகளால் தேர்தெடுக்கப்பட்டவர் என்பதை மறந்துவிட்டார். தான் பயணிக்கும் வழியின் ஓரத்தில் பதாகைளுடன் அமைதியாக மாணவர் நிற்பதை அனுமதிக்கமுடியாது எனக் கருதி அவர்களை அடித்துவிரட்டுமாறு உத்தரவிடும் அளவுக்கு அவர் காட்டுமிராண்டித்தனமாகச் செயற்பட்டுள்ளார்.

(எ-க-13-190)

# திருமலையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கு உதவுவதற்காக உலக நாடுகளும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் பெருமளவான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளன. அவற்றை உடனடியாகப் பாதிக்கப்பட்ட சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்கும் அரசு பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் -

ஆழிப்பேரலையில் வீடுகளை இழந்தவர்களுக்கும் புதிதாக வீடுகளை அமைப்பதற்காக வழங்கப்படும் உதவிகளை நிறுவனங்களோ இடைத்தரகர்களோ சுருட்டிக் கொண்டு செல்லை இடமளிக்காமல் அவற்றைப் பாதிக்கப்பட்ட மக்களிடமே நேரில் வழங்கவேண்டும் என்றும் -

வலியுறுத்தியே விகாராதிபதியும் அவரது ஐந்து இளம் சீடர்களும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்று விகாராதிபதி தெரிவித்தார்.

தனது போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த விகாராதிபதி கமுலுகமுவ நந்தரட்ண தேரர் தெரிவித்ததாவது:-

"மக்களுக்குப் போர் தேவையில்லை. சமாதானத்தையே அவர்கள் விரும்புகின்றார்கள். சில அரசியல்வாதிகளுக்குத்தான் போர் தேவைப்படுகின்றது. மீண்டும் ஒரு போரை ஆரம்பிப்பதற்கு நாங்கள் எப்போதும் சம்மதிக்கமாட்டோம். நாங்கள் யாரும் தனிப்பட்ட மத அடிப்படையில் சிந்திக்கக்கூடாது. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரும், நாங்கள் இலங்கையர்கள் என்று சொல்லவேண்டும்"

- என்றார். (எ-13-190)

# படையினரின் அத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - மேற்படி கண்டனப் பேரணி தொடர்பாக வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. நீர்வேலிப் பகுதியில் வயோதிபமாது மீது மேற்கொண்ட பாலியல் வல்லுறவு முயற்சியைக் கண்டித்து இன்று நடைபெறும் பேரணியில் அனைத்துப் பெண்களும் அணி திரண்டு பங்கேற்று எதிர்ப்பை வெளிக்காட்டவேண்டும்.

இவ்வாறான வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருக்க, கண்டனப் பேரணியில் கலந்துகொள்வது அனைவரதும் கடமையாகும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரணி குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த செய்திக் குறிப்பில் -

எந்தவித வேலையுமற்று முகாமில் இருக்கும் இராணுவத்திற்கு இப்பொழுது மதம் பிடிக்கத் தொடங்கியுள்ளது. வயது வித்தியாசமின்றி சேலை கட்டிய எல்லாப் பெண்களும் இராணுவத்தினருக்கு இளம்பெண்களாகவே தோன்றுகின்றனர். இத்தகைய பின்னணியில்தான் நீர்வேலியில் வயோதிபமாது மீது வல்லுறவு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்களைக் கண்டிக்காமல்விட்டால் குழந்தைப்பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இந்த வக்கிரப் போக்குகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும். இதன் முதற்கட்டமாக இடம்பெறும் பேரணியில் நாம் எல்லோரும் கலந்துகொள்ளவேண்டும். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-17-13-190)


**கேள்வி கோரல்** World Vision

வடமராட்சி உதவி அரசாங்க அதிபருக்குட்பட்ட பிரதேசத்தில் முன்பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான கேள்விகள் World Vision நிறுவனத்தினரால் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர் உரிய கட்டடப் படத்தின் பிரதியை 227, 3ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் 14,15,16ஆம் திகதிகளில் காலை 8.30 தொடக்கம் மாலை 5.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

தகவல்:
மாவட்ட முகாமையாளர்.
(43063)(30)

**N.S.A.**
ப.லிப்பாய் வீதி, உடுவில்.

தரம் 09 முதல் 11 வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 15.03.2005 Tue. 4.00 p.m.
Tam. S.சுமணன் Sci. V.குருபரன்
Ral. M.ஜேந்திரன் Mat. பிரபல ஆசிரியர்
Eng. A.நிஷாந்தன் Com. T.சுரேன
Soc. / Geo } M.பார்த்தீபன்.
(43073)(30-11-17)

A/L- 2007, 2006 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் நடைபெறுகின்றன.
- நிர்வாகி.


# கலந்துரையாடல்

கரவெட்டி, மார்ச் 14

சுனாமி பாதித்த பிரதேசங்களின் அபிவிருத்தி குறித்து ஆராய நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறையில் உள்ள சுனாமி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கனேடிய நாட்டு எம்.பிக்களும், கனேடிய நாட்டுத் தூதரர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர். (எ-70-190)

# சு.கவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல புதிய முகங்களுக்கும் அமைப்பாளர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. அதேபோல் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தேர்தல்களில் தொடர்ச்சியாகத் தோல்வியைத் தழுவிய பகுதிகளுக்குப் பொறுப்பான அமைப்பாளர்களும் கட்சியில் ஓரங்கட்டப்படவுள்ளனர். (எ-க)

# சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்த்தூள் விசிறப்பட்டது என்றும் - அதனைத் தொடர்ந்து அவர்கள் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் இலங்கேஸ்வரன் (வயது 21) அவரது சகோதரனான பத்மநாதன் சிவனேஸ்வரன் (வயது 19), தர்மதாஸ் ஜிம்சன் (வயது 19) ஆகியோரே தலையிலும் கைகளிலும் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

படுகாயமடைந்தோர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப்பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வாள் வெட்டுச்சம்பவத்தை அடுத்து அங்கு நேற்றுப் பின்னிரவு வரை முறுகல் நிலை நிலவியது என்றும் கூறப்பட்டது. (எ-13)

# முருங்கன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் நாகராசா ஜோதீஸ்வரன் என்பவரைத் தாம் கைது செய்துள்ளதாக முருங்கன் பொலீஸார் தெரிவித்தனர்.

கற்கண்டான்குள அகதிமுகாமில் இருந்த ஒருவருக்கும் அங்குவந்த வேறு இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடே துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மற்றொருவர் தப்பிச்செல்ல முயன்றபோது பொதுமக்கள் அவரை மடக்கிப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் நேற்று மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

அவரை நீதிவான் என்.எம். அப்துல் லாஹ் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அவர்வசம்இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளே தொடர்புபட்டிருக்கிறார்கள் என சந்தேகிக்கப்படுவதாக பொலீஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்தச் சம்பவம் குறித்துப் புலிகளின் மன்னார் அரசியல்துறை அலுவலகம் நேற்றிரவு எதனையும் உறுதிப்படுத்தவில்லை.

(எ-க)

# பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசியபின் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே நோர்வே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"இன்னும் தீர்க்கப்படவேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன. ஆனாலும், இப்போதைய நிலையின்படி பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் இரு தரப்புக்களும் உறுதியாக உள்ளன. அதுதான் முக்கியமானதும் அழுத்தம் தரக் கூடியதுமான விடயம்" - என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரிமளம் செல்லையா



யாழ். வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் முதலியார் மகேசன் வீதி, நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் செல்லையா அவர்கள் நேற்று (13.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் - முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர், நவீல்ட் பாடசாலை, கைதடி), திருமகள், கமலாதேவி (உப தபாலகம், நவாலி), அமரர் சேனாதிராஜா, சண்முகராஜா (I.S.S.F. Pvt. Ltd, Colombo-10), நாகராஜா, நடேசராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவனேஸ்வரி (ஆனந்தி), முத்துக்கிருஷ்ணன், சுகுமார், குலேக்மலர், ஜெயரஞ்சிதம், காயத்திரி (அராலி கிழக்கு, அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் சுஜீஸ் (UNHCR - கச்சேரி), சாரதா, குணாளன், மதுராங்கனி, குணசீலன், சைலா (இராமநாதன் நுண்கலைப் பீடம்), சோசினி (சென். திரேசா பெண்கள் பாடசாலை, கிளிநொச்சி), தஸ்தீன்குமார், சியாம்குமார் (யாழ். இந்துக் கல்லூரி), ஜெகதீசன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), சாகித்தியன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2005) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகேசன் வீதி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.*
*T.P.: 0773151241, 0773151240.*

தகவல்:
செ.பரமேஸ்வரி (மகள்).
(43090)(30-11-17)

## முதலி பொன்னு



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முதலி பொன்னு அவர்கள் நேற்று (13.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வயிரம்மாவின் அன்புக் கணவரும், நந்தாவதி (இத்தாலி), சந்திரவதன் (கொழும்பு), சாந்தினி, கஜேந்திரன் (மந்திகை, ஆதாரவைத்தியசாலை), மகேசன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தம்பிராசா, காந்தி (இத்தாலி), சந்திரன் (கீரேர கூ பலஸ், கொழும்பு), குணசிங்கம் (ப.நோ.கூ.ச., உடுப்பிட்டி), அருட்பராசகதி (அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜீபன், தர்சிகா, ஆனந்தி, தனுவந்தி, கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2005) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்து இளைஞர் மன்ற வீதி,*
*ஆவரங்கால் மேற்கு,*
*புத்தூர்.*
(43091)(30-11-17)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.